Registered as a News paper   பக்கங்கள் - 08   விலை - ரூபா 07

# ஈழநாதம்

மட்டக்களப்பு பதிப்பு   மக்கள் நாளிதழ்

Eezhanatham

இலவச பிரதி




நாதம் 01   திருவள்ளுவர் ஆண்டு 2035   வைகாசி 17   01. 06. 2004   செவ்வாய்க்கிழமை   ஓசை

## அமரர் ஐ. நடேசனுக்கு நாட்டுப்பற்றாளர் கௌரவம்

(நமது நிருபர்)

இலங்கையிலும் சர்வ தேச நாடுகளிலும், ஈழத்தமிழரின் துன்பங்களை நடுநிலை வகித்து, பத்திரிகாதர்மத்துடன் தொடர்ச்சியாக வெளிப்படுத்தி வந்த அமரர் ஜி.நடேசன் அவர்களுக்கே, விடுதலைப் புலிகள் நாட்டுப்பற்றாளர் பட்டத்தை வழங்கி கௌரவித்துள்ளனர். இது தொடர்பாக அரசியற்துறை வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டு ள்ளதாவது:

யுத்த சமாதான காலங்களில் இன்னல்களை அனுபவித்த தமிழ்மக்களின் வாழ்வியல் துன்பங்களையும், விடுதலையுடன் கூடிய இயல்பு வாழ்க்கைகளில் மக்கள் கொண்ட ஏக்கங்களையும் உள்ளூரிலும், உலகநாடுகளிலும் பரப்புரை செய்து, தமிழ்த்தேசியத்தின் எழுச்சிக்கும் அதன் உட்கட்டுமான வளர்ச்சிக்கும் பணியாற்றிய அமரர். ஜி.நடேசன் அவர்களுக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் 'நாட்டுப்பற்றாளர்' என்னும் நிலையை வழங்கிக் கௌரவித்துள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## எழுத்துத்துறையால் தமிழ்த் தேசியத்தின் கூர்மைப்படுத்தலுக்கு அறைகூவல் விடுத்தவர்

### ஊடகவியலாளர் ஐ. நடேசனின் படுகொலை குறித்து விடுதலைப்புலிகள் கண்டனம்.

தமிழ்த் தேசியத்தின் எழுச்சிக்கும் அதன் உட்கட்டுமான வளர்ச்சிக்கும் உரிய உழைப்புக்களை மேற்கொண்டு அயராது பாடுபட்டவர் தனது எழுத்துத்துறையால் தமிழ்த் தேசியத்தின் கூர்மைப்படுத்தலுக்கு ஓயாது அறைகூவல் விடுத்தவர் அற்புதமான கருத்துக்களை முன்வைத்தவர் தமிழ்த் தேசியத்திற்கு மாறான நடவடிக்கைகளையும் கருத்துக்களையும் வன்மையாக மறுதலித்தவர். தமிழினத்தின் விடுதலைக்கான விடுதலைப் போராட்டத்தின் நியாங்களை எழுத்துத்துறையால் வலியுறுத்தியவர்.

இவ்வாறு ஊடகவியலாளர் ஐ. நடேசன் அவர்களின் படுகொலை தொடர்பாக விடுதலைப்புலிகள் விடுத்துள்ள கண்டன அறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

தமிழீழ அரசியல் துறையினரால் விடுக்கப்பட்டுள்ள அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.

இனத்தின் விடுதலைக்கான நியாங்களை வலுப்படுத்தும் ஆணித்தரமான கருத்துக்களையும் தமிழினத்தின் போராட்டத்திற்கு வலுவூட்டும் புள்ளி விபரங்களையும், தரவுகளையும் அவ்வப்காலங்களில் தனது ஆக்கங்கள் மூலம் வெளிப்படுத்தியவர் நிகழ்காலத்தோடு எதிர்காலத்தை இணைத்து

(தொடர்ச்சி 8ம் பக்கம்)

# ஊடகவியலாளர் நடேசன் நேற்று தேசவிரோதிகளால் சுட்டுக் கொலை!

## யாழ் நெல்லியடியில் இறுதிக்கிரியை

(ஹரிச்சந்திரா)

**பிரபல தமிழ் ஊடகவியலாளர் ஐயாத்துரை - நடேசன் அவர்கள் மட்டக்களப்பில் நேற்றுக்காலை அவரது அலுவலகப்பணிக்காக சென்றபோது தேசவிரோதிகளால் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார். இந்த துக்ககரமான சம்பவம் தமிழ் மக்களையும் ஊடகத் துறை சார்ந்தோரையும் பேரதிர்ச்சியடையச் செய்துள்ளது.**



மட்டக்களப்பு வாவிக்கரை வீதியில் உள்ள அவரது வீட்டிலிருந்து அமிர்தகழி மாமாங்க வீதியில் உள்ள வருமானவரித் திணைக்கள அலுவலகத்திற்கு மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்த போது துப்பாக்கிச் சூட்டுச்சம்பவம் நடந்துள்ளது.

அவரது அலுவலகத் திற்கு 50 யார்த்தூரத்தில் மோட்டார் சைக்கிளில் வந்த போது அவருக்குப் பின்பக்கமாக துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இடது பக்க நெஞ்சிலும் கையிலும் காயம் ஏற்பட்ட நிலையில் சம்பவம் நடைபெற்ற இடத்திலே உயிரிழந்தார்.

இச்சம்பவத்தின் போது 9 மி.மீ. கைத்துப்பாக்கி பயன்படுத்தப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

சம்பவத்தையடுத்து இவரது சடலம் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்குச் எடுத்துச் செல்லப்பட்டது.

ஸ்தல விசாரணையை மட்டக்களப்பு நீதவான் எம்.எச்.எம். அஸ்மீர் மேற்கொண்டு பிரேத பரிசோதனையின் பின் சடலத்தை குடும்பத்தாரிடம் ஒப்படைக்குமாறு

(தொடர்ச்சி 8ம் பக்கம்)

## ஊடகவியலாளர் நடேசனின் கொலையை அடுத்து மட்டக்களப்பு மக்கள் மத்தியில் பீதி

(நமது நிருபர்)

மட்டக்களப்பு ஊடகவியலாளர் ஐ. நடேசன் அவர்கள் நேற்றுக்காலை அலுவலகத்திற்குச் சென்ற சமயம் சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவத்தையடுத்து தமிழ் மக்களிடையே கடும் பீதியும் அச்சமும் ஏற்பட்டுள்ளது.

அண்மையில் கிழக்குப் பல்கலைக்கழக பொருளியல் துறைத் தலைவர் குமாரவேல்பிள்ளை - தம்பையா சுட்டுக்கொல்லப்பட்டு ஏழாவது நாளான நேற்றுக் காலை தேசத்துரோகிகளால் சுட்டுக்கொல்லப்பட்ட ஊடகவியலாளர் நடேசன் அவர்களின் படுகொலையையடுத்து மக்கள் மிகுந்த அச்சம் அடைந்துள்ளனர்.

## வயது குறைந்த போராளிகளுக்கு புனர்வாழ்வளிக்க சுவீடன் பிரதிநிதிகள் புலிகளுடன் ஆலோசனை

(எஸ்.ரவீந்திரன்)

மட்டு- அம்பாறை மாவட்டத்திலுள்ள வயது குறைந்த போராளிகளுக்கு இடைத்தங்கல் முகாம் நிறுவி அவர்களுக்கான கல்வி யூட்டுவது தொடர்பாக சுவீடன் தூது வராலய பிரதிநிதிகள் நேற்று மட்டக்களப்பு அம்பாறை மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் இ. கௌசல்யனை சந்தித்து கலந்துரையாடியுள்ளானர்.

நேற்றுப்பிற்பகல் 2.30 மணிக்கு க஌வாஞ்சிக்குடி பட்டிருப்பு கோட்ட அரசியல் பணிமனையில் கலந்துரையாடல் நடைபெற்றது. இக்கலந்துரையாடலில் சுவீடன் தூதுவராலய இரண்டாவது செயலாளர் செல்வி எலிசபெத் கெனடி, சுவீடன் தூதுவராலய திட்ட அதிகாரி சீலா றிச்சட் ஆகியோர் கலந்து கொண்டனர்.

விடுதலைப்புலிகளின் சார்பில் அரசியல் துறைப் பொறுப்பாளர் இ.கௌசல்யன், மட்டக்களப்பு நகர அரசியல் பொறுப்பாளர் சேனாதிராஜா, மற்றும் மனோஜ் ஆகியோர் கலந்த கொண்டனர்.

இங்கு கருத்துத் தெரிவித்த கௌசல்யன் மட்டக்களப்பு,

(தொடர்ச்சி 8ம் பக்கம்)

## கல்முனை முன்னாள் பிரதேச சபை உறுப்பினர் வாகன விபத்தில் பலி!

(துஷி)

நேற்று முன்தினம் கல்முனையில் நடைபெற்ற திடீர் வாகன விபத்தில் கல்முனை முன்னாள் பிரதேச சபை உறுப்பினரும் ஆசிரியருமான வெற்றிவேல் - ஜெகதீசன் (56) சம்பவம் நடைபெற்ற இடத்திலேயே மரணமானார்.

இச்சம்பவம் பற்றித் தெரியவருவதாவது: நேற்று முன்தினம் தமது வீட்டுக்கு போவதற்காக வீதியால் நடந்து சென்ற போது வீதியால் வந்த இரண்டு மோட்டார் சைக்கிள்கள் விபத்திற்குள்ளாகி இவருடைய பக்கம் சாய்ந்த போது,

(தொடர்ச்சி 8ம் பக்கம்)

## விடுதலைப்புலிகளின் கட்டுபாட்டுப்பகுதியில் மனித உரிமை நிறுவனம் நிறுவ ஏற்பாடு

(நமது நிருபர்)

விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் இடம் பெற்று வரும் மனித உரிமை மீறல் சம்பவங்களை கண்காணிக்கும் வகையில், மனித உரிமை நிறுவனம் ஒன்றினை, தமிழீழ விடுதலைப் புலிகள் நிறுவவுள்ளதாக, தமிழீழ விடுதலைப் புலிகளின் பேச்சாளர் தயா மாஸ்டர் தெரிவித்துள்ளார். அண்மையில் சமாதானச் செயற்பாடுகளின் சர்வதேச மன்னிப்புச் சபையின் முன்னாள் தலைவரும், மனித உரிமைகள் தொடர்பான விவகாரங்களில் நிபுணத்துவம் பெற்றவருமான இயன் மார்ட்டினுடன் இடம்பெற்ற சந்திப்பின் போது, விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் மனித உரிமை நிறுவனம் ஒன்று ஆரம்பி க்கப்படுமென, அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் உறுதியளித்திருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கதாகும். இதேவேளை, தமிழீழ

(தொடர்ச்சி 8ம் பக்கம்)

## மனோ குழுவினர் அரசியல் பொறுப்பாளருடன் சந்திப்பு

(நமது நிருபர்)

மேல் மாகாண மக்கள் முன்னணிக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளருக்கும் இடையே நேற்று முற்பகல் 11 மணியளவில் இந்தச் சந்திப்பு கிளிநொச்சி சமாதான செயலகத்தில் இடம்பெற்றது.

தென்னிலங்கையில்

(தொடர்ச்சி 8ம் பக்கம்)

## இன்றைய நாளில்

### துனீசியா தேசிய தினம்



### கடல்களின் உயிர்ப்பைக் காப்போம

பூமியின் உயிர்த்திணிவில் 90 சதவீதத்திலும் அதிகமான அளவு சமுத்திங்களிலேயே உயிர்கள் வாழுகின்றன.

# விடுதலைப் புலிகள் மீதான தடையை அகற்றுவது இந்தியாவின் தார்மீகக் கடமை

## மன்மோகன்சிங்கிற்கு இந்துகுருமார் ஒன்றியம் கடிதம்

(கொழும்பு நிருபர்)

ஈழத்தமிழர்கள் சமாதான வழியில் இயல்பு வாழ்க்கையை எதிர்பார்த்திருக்கும் இன்றைய சூழ்நிலையில், தமிழ்மக்களின் ஏகப்பிரதிநிதிகளான விடுதலைப் புலிகள் மீது இந்தியாவில் விதிக்கப்பட்டிருக்கும் தடையை நீக்குவதே இந்திய அரசின் தார்மீகக் கடமையாக அமையும். இவ்வாறு சர்வதேச இந்து மத குருமார் ஒன்றியம், இந்தியப் பிரதமர் டாக்டர் மன்மோகன் சிங்குக்கு எழுதிய கடிதத்தில் தெரிவித்துள்ளது.

அக் கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது இலங்கை பல ஆண்டுகளுக்கு முன்னர் சுதந்திரம் அடைந்தபோதிலும் தமிழ்மக்கள் அந்தச் சுதந்திரக் காற்றை சுவாசித்தார்களா? இல்லை! பெரும்பான்மையான சிங்கள மக்களின் இனவாத தலைமைகளினால் தமிழ்மக்கள் பல வகைகளாலும் அடக்கி ஒடுக்கப்பட்டார்கள். அவர்களின் உரிமைகள் மறுக்கப்பட்டன.

அத்துடன், இராணுவ நடவடிக்கை என்ற பெயரில் தமிழ மக்களின் சொத்துக்கள், உடைமைகள் அழிக்கப்பட்டன. அதற்கு எதிராக எழுந்த ஆயுதப் போராட்ட மானது இன்று அழிக்கப்படமுடியாத ஒரு சக்தியாக உரு வெடுத்துள்ளது. அந்த சக்தியே தமிழ் மக்களின் ஏகப்பிரதி நிதிகளான விடுதலைப் புலிகள். தமிழ்மக்கள், சுதந்திரமான தாயகத் தில் சுயநிர்ணய உரிமையுடன் நிம்மதியான இயல்பு வாழ்க்கை வாழ வேண்டும்



என்பதனை தமது இலட்சியமாக கொண்டவர்கள் தமிழீழ விடுதலைப் புலிகள். கடந்த இரண்டு வருடங்களுக்குமேல் புரிந்துணர்வு ஒப் பந்தத்தை மதித்து நேர்மையாகவும், மிகவும் பொறுமையுடனும் போர் நிறுத்தத்தைக் கடைப்பிடித்து - நடை முறைப்படுத்தி - சர்வதேசத்தை ஒரு கணம் திரும்பிப பார்க்க வைத்தவர்கள் விடுதலைப் புலிகள். அந்த இயக்கம் மீதான தடையை உடனடியாக நீக்கி, விடுதலைப் புலிகளை இந்தியாவிலும் அங்கீகரிக்கப்பட்ட இயக்கமாக ஏற்றுக் கொள்ளவேண்டும் என்பதை இவ் வேளையில் ஆணித்தரமாக வலியுறுத்துகின்றோம்.

தமிழ்மக்களின் ஏகப்பிரதிநிதிகள் விடுதலைப் புலிகள்தான் என்பதை அண்மையில் நடைபெற்ற பொதுத் தேர்தல் உணர்த்தியுள்ளது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரின் அமோக வெற்றி தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு ஓர் அங்கீகாரத்தினை ஏற்படுத்தியுள்ளது. தமிழ்மக்கள் தமது தாயக பூமியிலே சுதந்திரமாக வாழ்வதனையே தமது இலட்சியமாகக் கொண்டுள்ள விடுதலைப் புலிகள், இந்தியாவின் நலனிற்கோ அல்லது பிராந்திய நலன்களுக்கோ குந்தகமாக இருக்கமாட்டார்கள்.

இந்தியாவில் அரசியல் மாற்றம் ஏற்பட்டபோது அந்த அரசியல் மாற்ற மானது தமிழ்மக்களின் உரிமைகளை பெற்றுத்தரும் என்று நாம் மகிழ்வடைந்திருந்தோம்.ஆனால், ஈழத்தமிழர் எண்ணியதற்கு மாறாக புலிகள் மீதான தடையானது மேலும் இரண்டு ஆண்டுகள் நீடிக்கப்பட்டுள்ளதை அறிந்து வேதனை அடைந்தோம்.

கடந்த பல ஆண்டுகளுக்கு மேலாக ஈழவிடுதலைப் போராட்டத்தில் அளப்பரிய தியாகங்கள் புரிந்து தமிழினம் இன்று சமாதான முறையில் நிரந்தர இயல்பு வாழ்க்கையை எதிர்பார்த்து நிற்கிறது. இத்தகைய சூழ்நிலையில், எமது போராட்டத் துக்கு பூரண ஆதரவு வழங்கி, தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரிப்பதே இந்திய அரசின் தார் மீகப் பொறுப்பாக அமையும்.எனவே, புதிதாகப் பதவியேற்ற இந் திய அரசு, இந்த முடிவினை மீள் பரிசீலனை செய்து - தமிழ்மக்களின் ஏகப்பிரதிநிதிகளான தமிழீழ விடுதலைப் புலிகள் மீதான தடையை நீக்கி, தமிழ்மக்கள் நிம்மதியாகவும், சுதந்திரமாகவும், சுயநிர்ணய உரிமை யுடனும் வாழ்வதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டுமென தமிழ்மக்கள் சார்பாக கேட்டுக்கொள்கின்றோம். என்று அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# செய்தித் துளிகள்

## திருக்குளிர்த்தி

(செ.பேரின்பராஜா)

மட்டக்களப்பு மாவட்டத்தின் தென் எல்லையில் உள்ள வரலாற்றுச் சிறப்பு மிக்க துறைநீலாவணை அருள்மிகு ஸ்ரீ கண்ணகி அம்மன் ஆலய உற்சவப் பெருவிழா இன்று இரவு இடம் பெறும் திருக்கதவு திறத்தல் வைபவத்துடன் ஆரம்பமாகி, எதிர் வரும் 08ஆந் திகதி அதிகாலை திருக்குளிர்த்தி வைபவத்துடன் இனிது நிறைவு பெறவுள்ளது.

இவ் ஆலய உற்சவத்தின் விஷேட நிகழ்வுகளான ஊர்காவல் வைபவம், கன்னிக்கால் வெட்டுதல்,வட்டுக்குற்றுதல் போன்ற நிகழ்வுகள் முறையே 4ம்,6ம், 7ம்,திக திகளில் இடம் பெறவுள்ளதென துறைநீலாவணை ஆலய பரிபாலன சபைத் தலைவர் கு.மனோகரன் ஆசிரியர் தெரிவித்தார்.

இவ்வருட உற்சவப் பெருவிழாவை முன்னிட்டு எதிர்வரும் 6ம்,7ம் திகதிகளின் இரவு வேளையில் விசேட கலை நிகழ்வுகள் கண்ணகி அரங்கில் இடம் பெறவுள்ளன.

## கும்பாபிஷேகம் திருச் சடங்கு

(நமது நிருபர்)

மட்டக்களப்பு நாவலடி ஸ்ரீ மாரி கடலாட்சி ஆலய மகா கும்பாபிஷேகப் பெரும் சாந்தி விழா எதிர் வரும் யூன் 6ம் திகதி ஆரம்பமாகி யூன் 19 திகதி கும்பாபிஷேகம் நடைபெறவுள்ளது. அதனைத் தொடர்ந்து யூன் 12ம் திகதிவரை மண்டலாபிஷேகம் நடைபெற்று யூன் 25ம் திகதி முதல் யூலை 2ம் திகதி வரை வருடாந்த சடங்கு நடை பெறும். என ஆலய பரிபாலன சபையினர் தெரிவித்துள்ளனர்.

## சர்வதேச புகைத்தல் எதிர்ப்பு தினம்

(கர்ன்)

ஏறாவூர் பிரதேச செயலகப்பிரிவில் சர்வதேச புகைத்தல் எதிர்ப்பு தினத்தை முன்னிட்டு திங்கட்கிழமை முதல் எதிர்வரும் யூன் 7ம் திகதி வரை 38 கிராமசேவகர் பிரிவுகளில் கொடிவாரம் பிரகடனப் படுத்தப்படவுள்ளது.

இதனை முன்னிட்டு புகைத்தல் எதிர்ப்பு சம்பந்தமான விழிப்புணர்வுக் கருத்தரங்கும் கொடி விற்பனையும் நடை பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## திருக்குளிர்த்தி

(நமது நிருபர்)

வந்தாறுமூலை ஸ்ரீகண்ணகை அம்மன் ஆலய வருடாந்த திருக்குளிர்த்தி வைபவம் நேற்று மாலை மிகவும் சிறப்பாக நடைபெற்றது பல்வேறு கிராமங்களிலிருந்தும் மக்கள் குளிர்த்தி வைபவத்தில் கலந்து கொண்டனர்.

## பரீட்சாத்திகள் கவலை

(எஸ்.ரவிந்திரன்)

இலங்கை கல்வி நிருவாக சேவையில் ஆட்சேர்ப்புச் செய்வதற்கான போட்டியில் பரீட்சை நடாத்தப்பட்டு இரண்டு வருடமாகியும் இன்னும் பரீட்சை முடிவு வெளியாகாததையிட்டு பரீட்சாத்திகள் கவலை தெரிவிக்கின்றனர்.

கடந்த 2002ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 28ம் திகதி நாடளாவிய ரீதியில் இப்பரீட்சை நடாத்தப்பட்டது குறிப்பிடத்தக்கது.

## மனித உரிமை ஆணைக் குழு நடவடிக்கை

(துஷி)

திருக்கோயில் பிரதேச பொதுமக்கள் ஜனசக்தி திட்டத்தினால் சேமித்த நிதி வழங்கப்படாமை குறித்து மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்ததையடுத்து நிதி மீளப்பெற்று கொடுப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. 1989ம் ஆண்டு ஜனசக்தி திட்டத்தில் இணைந்து கொண்ட மக்களே இவ்வாறு பாதிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# அரசுடன் இ.தொ.காங்கிரஸ் இணைவதென்பது வெறும் புரளி

(கொழும்பு நிருபர

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் மாகாணசபைத் தேர்தலின்பின் அரசுடன் இணையப் போகின்றது என்பது வெறும் புரளியே. நடைபெறவுள்ள மாகாணசபைத் தேர்தலில் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் செல்வாக்கைக் குறைக்கவும் அதைத் தோல்வியடையச் செய்வதற்குமான ஒரு சதித் திட்டமாகவே இப்புரளியை சில சக்திகள் பரப்புகின்றன என்கிறார். முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும், இ.தொ. கா.உபதலைவருமான இரா.யோகராஜன்.அரசுடன் நாம் பேச்சு நடத்துகின்றோம் பேரம் பேசுகின்றோம் இணக்கப்பாட்டிற்கு வந்துள்ளோம் என்றெல்லாம் வதந்திகள் கிளப்பிவிடப்பட்டுள்ளன.

ஒரு நாட்டின் தலைவர் என்ற அடிப்படையில் பல்வேறு பிரச்சினைகள் தொடர்பாக ஜனாதிபதியைச் சந்தித்துப் பேசிஉள்ளோம். கந்தப்போல அசம்பாவிதங்கள், இங்கிரியாவில் தமிழர் படுகொலை, பொதுத்தேர்தலின் பின் தோட்டத் தொழிலாளர்கள் தாக்கப்பட்டமை போன்ற பல விடயங்கள் பற்றி ஜனாதிபதியிடம் பேசினோம். அமைச்சுப் பொறுப்புக்களைத் தரும்படி பேசவில்லை.நாம் அரசுடன் இணைவதாக இருந்தால் சபாநாயகர் தெரிவின் போதும், பிரதி சபாநாயகர் தெரிவின்போதும் இணைந்திருக்க முடியும் என்றார்.

# யாழ். அரியாலையைப் பகுதியில் மின்சாரம் தாக்கி இருவர் பலி!

(கொழும்பு நிருபர்)

இருவேறு இடங்களில் நேற்று முன்தினம் இடம் பெற்ற மின்சாரம் தாக்கிய சம்பவங்களில் இளைஞர் ஒருவர் உயிரிழந்தார் 4 வயதுச் சிறுவன் ஒருவர் காயமடைந்தார்.அரியாலை மேற்கில் இடம்பெற்ற ஒரு சம்பவத்தில் பத்மநாதன் செல்வநாதன் (வயது-20) என்ற இளைஞர் உயிரிழந்தார்.ஆலய நிகழ்வொன்றிற் காக தென்னை மரமொன்றில் ரியூப் பல்ப்' பொருத்தப்பட்டிருந்ததாகவும் - அதிகாலை கிணற்றடிக்குச் சென்ற குறிப்பிட்ட இளைஞர், அந்த மரத்தில் சாய்ந்துநின்று பல்துலக்கிய போது மின் ஒழுக்கு ஏற்பட்டு அவர் தாக்குண்டதாகவும் கூறப்பட்டது. வைத்தியசாலைக்கு எடுத்து வரும் வழியில் அவர் உயிரிழந்தார்.

# சமாதானப் பேச்சு இழுபறிப்பட்டால் புரிந்துணர்வுடன் படிக்கைக்கு ஆபத்து

## பிரதமர் கூறியதாக ஈழவேந்தன் தெரிவிப்பு

(கொழும்பு நிருபர்)

தமிழ் மக்களுடைய பிரச்சினைக் குத் தீர்வுகாண்பது மீண்டும் இழுபடு மாயின் முந்திய தமிழ்-சிங்களத் தலைவர்களுக்கிடையிலான ஒப்பந்தங்களுக்கு ஏற்பட்ட நிலைமையே தற்போதைய ஒப்பந்தத்துக்கும் ஏற்படும் என்று பிரதமர் மகிந்த ராஜபக்ஷ கவலை தெரிவித்திருக்கிறார்.இத்தகவலை அவரே தன்னிடம் கூறியதாக தமிழ்க் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் மா.க.ஈழவேந்தன் தெரிவித்தார்.

அண்மையில் நாடாளுமன்ற உணவகத்தில் பிரதமர் மகிந்த ராஜபக்ஷவை தனியாக தற்செயலாகச் சந்தித்து உரையாடும் சந்தர்ப்பம் கிடைத்ததாகவும், அவ்வேளையிலேயே பிரதமர் தன்னிடம் மேற்படி கருத்தைத் தெரிவித்தார் என்றும் ஈழவேந்தன் தகவல் தந்தார்.பிரதமருடன் தான் உரையாடிய விடயங்கள் தொடர்பாகவும் தற்போதைய அரசியல் சூழ்நிலைகள் தொடர்பாகவும் செய்தியாளருடன் நடத்திய பிரத்தியோகச் சந்திப்பின் போது அவர் மேலும் கூறியதாவது:-

பிரதமர் மகிந்த ராஜபக்ஷ என்னோடு பேசுகின்றபோது மனம் திறந்து சிலவிடயங்களைக் கூறினார்.ஜனாதிபதியை சந்திப்பது அருமை நான் நாட்டின் பிரதமராக இருக்கின்ற போதிலும், ஜனாதிபதி சந்திரிகாவை நீண்ட நாள்களாக சந்திக்க வில்லை. அவரைச் சந்திப்பதே அருமையாக இருக்கிறது. அவர் என்ன சிந்திக்கிறார் என்பது கூட எனக்குத் தெரியாமல் இருக்கிறது" என்றார். ஜே.வி.பி. முன்னர் போல தெருவில் ஆர்ப்பாட்டம் செய்யும் கட்சி அல்ல. ஆகவே, தமிழ் மக்களின் தலைவர்களாகிய நீங்கள் ஜே.வி.பியினருடன் பேசிப்பாருங்கள். அவர்களிடம் மனமாற்றத்தை ஏற்படுத்துங்கள் - என்றும் பிரதமர் என்னிடம் தெரிவித்தார்.

தமிழ் மக்களுடைய பிரச்சினைக்குத் தீர்வுகாண்பது மீண்டும் இழுபடுமாயின் முன்னைய ஒப்பந்தங்களுக்கு ஏற்பட்ட அதே நிலைமை மீண்டும் ஏற்படும். தற்போது நாட்டின் பொருளாதாரம் படுகுழியை நோக்கிச் சென்று விட்டது. வேலை யில்லாத் திண்டாட்டம் பெருகிவிட்டது. இவ்வாறாக இன்னோரன்ன பிரச்சினைகள் பெருகு கின்றபோது தமிழ் மக்களுடைய பிரச் சினை மறைக்கப்படலாம் மறக்கப் படலாம் திசைதிருப்பப்படலாம் - என்றும் பிரதமர் சொன்னார்.

அவ்வாறான ஒரு நிலை ஏற்படு கின்றபோது அதன் விளைவு தமிழ் மக்களுக்குப் பெரிய ஆபத்தை ஏற்படுத்தும் என்று சுட்டிக்காட்டிய பிரதமர், எனவே உங்களுடைய பிரச்சினைகளை விரைந்து தீர்ப்பதற்கு முயற்சியுங்கள் என்றும் கூறினார்.எனவே, இந்த விடயத்தில் மிகுந்த தெளிவுடன் இருக்கின்ற நீங்கள் எங்களுடைய பிரச்சினைகளைத் தீர்ப்பதற்குப் பிரதமர் என்ற வகையில் எத்தகைய உதவிகளை வழங்குவீர்கள் என்று நான் பிரதமரிடம் கேட்டேன்.

அதற்கு அவர் தற்போது இங்கு நிலவுகின்ற சூழலில் நான் எதுவும் செய்ய முடியாத நிலையில் உள்ளேன். (I am helpless) என்று கூறினார்.எனவே, நாட்டின் பிரதமர் கூட எதனையும் உருப்படியாகச் செய்து ஈழத்தமிழர்களுக்கு உதவமுடியாத நிலையில் இருக்கிறார் என்பதே இப்போதைய நிலை என்பதனை உணர முடிகிறது. எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க மற்றும் முன்னாள் அமைச்சர்களான பேராசிரியர் ஜி.எல். பீரிஸ், ஜயலத் ஜயவர்த்தன, மிலிந்த மொறகொட ஆகியோருடனும் நான் இன்றைய அரசியல் சூழ்நிலை குறித்து உரையாடினேன். எதற்குமே நம்பமுடியாத ஒரு போர் வழிதான் ஜனாதிபதி சந்திரிகா" என்று அவர்கள் என்னிடம் கூறினார்கள். ஈழத்தமிழரின் இனச்சிக்கலுக்குத் தீர்வுகாண்பதற்கு எங்களால் இயன்றதைச் செய்வோம் என்றார்.

## சமாதானத்தை இழக்கும் நிலை ஏற்பட்டாலும்

# நோர்வே பின்வாங்கக் கூடாது

–கல்முனையில் அகில இலங்கை அரச பொது ஊழியர் மன்றத் தலைவர்–

(வி.ரி.சகாதேவராஜா)

புதிய அரசாங்கமும், ஜனாதிபதிம் சமாதானப் பேச்சுவார்த்தை என்ற காய் நகர்த்தலில் ஈடுபடுகின்ற போது அது நம்பிக்கையூட்டுபவையாக இல்லை. இருக்கின்ற சமாதானத்தையும் இழக்கின்ற நிலையே தென்படுகிறது. எது எப்படியிருப்பினும் நோர்வே அரசு சமாதான முயற்சியிலிருந்து பின்வாங்கக்கூடாது

இவ்வாறு ஞாயிறன்று கல்முனை உவெஸ்லி கல்லூரியில் நடைபெற்றஅகில இலங்கை அரசாங்க பொது ஊழியர் சங்கத்தின் அதியுயர் பீட நிருவாகக் கூட்டததில் பேசிய சங்கத் தலைவர் எஸ்.லோகநாதன் வேண்டுகோள் விடுத்தார்.

அங்கு அவர் மேலும் பேசியதாவது:-

"நோர்வேத் தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் பெரும் எதிர்பார்ப்போடு வந்து வெறுங்கையோடு சென்றிருக்கிறார். ஜனாதிபதி கதிர்காமர் ஜே.வி.பி இவர்களுள் மாறுபட்ட பேச்சுக்கள் சமாதானத்தின் எதிர்காலம் சூனியமாகக்கூடிய நிலையே பரவலாகக் காணப்படுகிறது.

சமாதானம் நிலைக்குமா? நீங்குமா? என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும். வடகிழக்கு மக்களை ஏமாற்ற அரசாங்கம் எண்ணக்கூடாது

அரசினுடைய நோக்கமெல்லாம் வெளிநாட்டு நிதியின் மீதுள்ளது. இவ்விடயத்தில் தமிழ்க்கட்சிப் பிரதிநிதிகள் மௌனத்தைக் கடைப்பிடிப்பது நல்லதல்ல அரசுக்கு அழுத்தம் கொடுத்து சமாதானமா? போரா? என்பதனை அறிந்து மக்களுக்குத் தெரியப்படுத்த வேண்டும்.

இன்னுமொரு வடகிழக்கு மக்கள் குறிப்பாகத் தமிழ் மக்கள் ஏமாறத் தயாரில்லை.

நோர்வே அரசை நாம் நம்புகிறோம். சமாதானத் தீர்வில் எத்தகைய இடர் வரினும் துவளக் கூடாது. எமது உதவியும் கிடைக்கும் வடகிழக்கின் முக்கிய தொழிற்சங்கம் என்ற அடிப்படையில் எமது ஒத்துழைப்பு என்றும் நோர்வே அரசுக்கு உண்டு

இந்தியாவின் புதிய பிரதமர் மன்மோகன் சிங்கும், தலைவி சோனியா காந்தியும் இலங்கை விடயத்தில் இதயசுத்தியுடன் இயங்கி நிரந்தர சமாதானத்திற்கு வகை செய்ய வேண்டும். தேசியத் தலைவர் பிரபாகரனின் இடைக்கால தன்னாட்சி சபையை அரசு உடனடியாக அங்கீகரித்தால் சமாதானத்துக்கான பயணம் தொடரும் இன்றேல் விபரீதமாகும்.

புதிய பாராளுமன்ற உறுப்பினர்கள் கல்வியில் தலையிட்டுக் குழப்பக்கூடாது. தங்கள் முன்னுள்ள பாரிய பொறுப்புகளை முதலில் செய்ய முயற்சிக்க வேண்டும். அதை விடுத்து தேவையற்ற பிரச்சினைகளில் மூக்கை நுழைத்து கால நேரத்தை விரயமாக்க வேண்டாம். என்று சங்கம் சார்பாக வேண்டுகிறோம். பொருளாளர் இப்றாலெவ்வையின் உரையைத் தொடர்ந்து செயலாளர் ரி.விக்ரமசிங்கன் நன்றியுரையாற்றினார்.

## பதில் காணிப் பதிவாளர்களுக்கு சலுகை வேண்டும் அரசாங்க பொது ஊழியர் சங்கம் மனு

(விரி.சகாதேவராசா)

பதிவாளர் சேவையின் 2ம்தரத்தின் பதிவாளர் பதவிக்கு ஆட்சேர்க்கப்படும் போது பதில் காணிமாவட்டப் பதிவாளர்களுக்கும் சலுகை வழங்கப்பட வேண்டும்

இவ்வாறு பொதுநிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சர் அமர சிறி தொடங்கொடவிற்கு, அகில இலங்கை அரசாங்க பொது ஊழியர் சங்கம் அனுப்பியுள்ள மகஜ ரில் வேண்டுகோள் விடுக்கப்க ட்டுள்ளது.

பதிவாளர் சேவையின் 2ம் தரத்தின் பதிவாளர் பதவிக்கு 14.05. 2004 வர்த்தமானி மூலம் விண்ணப்பம் கோரப்பட்ட போது விண்ணப்ப முடிவுத்திகதி 15.06.2004 என்றும் தரம்3ஐ சேர்ந்த பதிவா ளர்களுக்கு விசேடசலுகையும், தேர்ந்தெடுப்போரில் 25வீதமானோர் அவர்களில் இருந்தே தேர்ந்தெடுக்கப் படுவரெனவும் குறிப்பிடப்பட்டிருந்தது.

இதனை ஆட்சேபித்த அரச பொது ஊழியர் சங்கம் வட-கிழக்கில் காணிப் பதிவாளராக பணியாற்றுவோர் பதில் பதிவாளர்களாகவே சேவையாற்றுகின்றனர். அவர்களுக்கும் மேற் குறிப்பிட்ட சலுகை வழங்கப்பட வேண்டும் என்று வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. 5-10 வருட காலம் எவ்வித கொடுப்பனவும் இல்லாமல் பதில் கடமையாற்றுவோர் கவனிக்கப்படவேண்டும்

## முஸ்லிம் காங்கிரசுக்கு எதிராக புதிய முஸ்லிம் கட்சி உதயம்

நமது நிருபர்

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரசுக்கு எதிராக புதிய முஸ்லிம் கட்சி ஒன்று, அரசாங்கத்தின் ஆதரவுடன், மேல் மாகாண சபைத் தேர்தலுக்கான தனது வேட்டுமனுவை தாக்கல் செய்துள்ளது.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு அரசின் ஆதரவுடன், மாகாண சபைத் தேர்தலில் குதித்துள்ள இப்புதிய முஸ்லிம் கட்சியின் வேட்பாளர்கள் ஒவ்வொருவருக்கும், தேர்தல் பிரசாரப் பணமாக தலா ஒரு மில்லியன் ரூபா பணத்தினை அரசாங்கம் வழங்கியுள்ளதாகவும் தெரியவருகிறது.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் முக்கியஸ்தர்களுள் ஒருவரான சிறிபதி சூரியாராச்சி என்பரே இக்கட்சியின் தோற்றத்துக்கான அரசின் பிரதான தூதுவராக விளங்குவதாக அறியப்படுகிறது.

நசீர் அஹமட் என்பவரின் தலைமையிலான இக்கட்சியில், சிறிலங்கா முஸ்லிம் காங்கிரசின் முன்னாள் அங்கத்தவர் எம்.ஜே.எம். முஸாம்பில் என்பவரும் இடம்பெற்றுள்ளார்.

ரவூப் ஹக்கீமை, சிறிலங்கா முஸ்லிம் காங்கிரசின் தலைவர் பதவியிலிருந்தும், முஸ்லிம்களின் தேசியத் தலைவர் என்ற பதவியிலிருந்தும், நீக்குவதை வலியுறுத்தி, சகல பள்ளிவாசல்களின் ஊடாகவும், ஆர்ப்பாட்டங்களை நடத்துவதற்கு இப்புதிய முஸ்லிம் கட்சி தீர்மானித்துள்ளதாகவும் தெரியவருகிறது.

இதேவேளை, ரவூப் ஹக்கீம் மீதான பாலியல் குற்றச் சாட்டினையும், துறைமுக அமைச்சராக அவர் இருந்தவேளை இடம் பெற்ற ஊழல்களையும் அம்பலப்படுத்தும் வகையில், சுயாதீன விசாரணைக் குழுவொன்றும் அமைக்கப்படவுள்ளதாக புதிய முஸ்லிம் கட்சி தெரிவித்துள்ளது.

## வாழைச்சேனை அரச ஊழியர்கள் சிரமம்

(நிமலன்)

வாழைச்சேனை புகையிரத நிலையத்திலிருந்து அரச ஊழியர் இலவச பயண அனுமதி சீட்டுடன் பயணம் செய்யும் அரச ஊழியர்களுக்கு உறங்கு நிலை ஆசனங்களை அதிகரிக்க வேண்டுமென அரச ஊழியர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

அரச ஊழியர்களுக்கான இலவச பயணச் சீட்டுடன் பயணம் செய்யும் ஊழியர்களுக்கு ஒதுக்கப்படும் ஆசனங்கள் நேரகாலத்துடன் முடிவடைந்து விடுவதால் ஏனையோர் பயணத்தை இடை நிறுத்தி விடுவதாகவும் ஊழியர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

## பொருண்மிய நிறுவனத்தால் சூழல் தினம் அனுஷ்டிப்பு

(மயூரன்)

உலக சூழல் தினத்தை முன்னிட்டு தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் சூழல் பாதுகாப்புப் பிரிவு யூன் ஐந்தாம் திகதி உலக சூழல் தினமாக கொண்டாடவுள்ளது. அத்துடன் யூன் முதலாம் திகதி முதல் 30ம் திகதி வரை சூழல் விழிப்புணர்வு மாதமாக அனுஷ்டிக்கப் படவுள்ளதாக தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன சூழல் பாதுகாப்புப் பகுதி திட்ட இணைப்பாளர் மகிழன் ஈழநாதம் மட்டக்களப்பு பதிப்புக்கு தெரிவித்துள்ளார்.

## அம்பாறை மாவட்டத்தில் பின்தங்கிய பகுதிக்கு ஆசிரியர் நியமனம் வழங்க வேண்டும். –யூ.எல்.உவைஸ்–

(ஏ.எல்.றமீஸ்)

வட, கிழக்கு மாகாணத்தில் வழங்கப்படவிருக்கும் 3000 ஆசிரியர் நியமனங்களின் போது அம்பாறை மாவட்டத்தில் மிகவும் பின்தங்கிய கிராமங்களான பொத்துவில், இறக்காமம், வரப்பத்தாஞ்சேனை, அட்டாளைச்சேனை, ஒலுவில், பாலமுனை ஆகிய கிராமங்களுக்கு முன்னுரிமை வழங்க வேண்டுமென்று ஸ்ரீ.மு.காங்கிரஸின் அக்கரைப்பற்று அமைப்பாளர் யூ.எல்.உவைஸ் வடக்கு கிழக்கு மாகாண ஆளுனருக்கு அனுப்பி வைத்துள்ள தொலைமடலில் வேண்டுகோள் விடுத்தார்.

இது தொடர்பாக உவைஸ் மேலும் குறிப்பிடுகையில் ஆசிரிய நியமனங்கள் வழங்கப்படும் போது திட்டமிட்ட முறையில் புதிய நடைமுறையொன்றை நிர்ணயித்துக் கொள்வதன் மூலம் காலதாமதம், தடைகள் என்பனவற்றை நீக்கலாம்.

கல்வியில் அபிவிருத்தி அடையாத பிரதேசங்களை இனங்கண்டு திட்டமிட்ட அடிப்படையில் அபிவிருத்தி செய்ய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். கல்வி அபிவிருத்தி, மாகாண, மாவட்ட நடைமுறைகள் மாற்றி பிரதேச அடிப்படையில் மேற்கொள்வதன் மூலம் துரித அபிவிருத்தியை ஏற்படுத்தலாம்.

கடந்த 20 வருடங்களுக்கு மேலாக பல பிரதேசங்கள் கல்வியில் பின்தங்கிக் கிடக்கின்றன. இதற்கான நிவாரண நடவடிக்கைகளை கல்வித் திணைக்கள அதிகாரி நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் உவைஸ் தொலை மடலில் குறிப்பிட்டார்.

## மட். புகையிரதப் பணியாளர் பிரச்சினைக்குத் தீர்வு கிடைக்காவிடின் மனித உரிமை மீறல் வழக்குத் தாக்கல்

(நமது நிருபர்)

மட்டக்களப்பு மாவட்ட புகையிரதக்கடவை பணியாளர்களது பிரச்சினை தொடர்பாக நாடாளுமன்றத்தில் பேசித்தீர்வு காண நடவடிக்கை எடுக்கவுள்ளதாகவும் பலனளிக்காவிடத்து அடிப்படை மனித உரிமை மீறல் வழக்கு தாக்கல் செய்யப்போவதாகவும் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ். ஜெயானந்தமூர்த்தி தெரிவித்தார். ஞாயிற்றுக்கிழமை மட்டக்களப்பு மாவட்டப் புகையிரத கடவைப் பணியாளர்கள் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.ஜெயானந்தமூர்த்தியை சந்தித்து பேசியபோதே மேற்கண்ட தகவலை தெரிவித்தார்.

காலம் சென்ற முன்னாள் ஜனாதிபதி ஆர். பிரேமதாஸா அவர்களின் காலத்தில் 1989ம் ஆண்டு புகையிரத பணியாளர்கள் வேலைக்கு அமர்த்தப்பட்டனர். ஆயிரம் ரூபா வேதனம் வழங்கப்பட்ட மிகநீண்ட காலத்திற்குப்பின் தற்போது மூவாயிரம் ரூபா மட்டுமே கிடைக்கிறது. இதுதொடர்பாக தொழிற்சங்கப் போராட்டங்கள் நடத்தியும் எதுவித பலனும் ஏற்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

## சத்துருக்கொண்டானில் சோதனை கெடுபிடி அதிகரிப்பு!

(நமது நிருபர்)

மட்டக்களப்பு மாவட்டத்தில் படையினரின் பாதுகாப்பு கெடுபிடிகள் அதிகரிக்கப்பட்டுள்ளமை குறித்து பொதுமக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

மட்டக்களப்பு திருமலை வீதியிலுள்ள சத்துருக்கொண்டான் என்னுமிடத்தில் படையினர் பொது மக்களை இறக்கி ஏற்றி மிகக் கடுமையான முறையில் சோதனை செய்வதாக பொதுமக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

## வவுனியாவில் கரடி கடித்து ஒருவர் காயம்

வவுனியா வெள்ளாளம்பிட்டி பிரதேசத்தில் மனால் ஏற்றச் சென்ற நபர் ஒருவர் கரடிக்கடிக்கு இலக்காகி வவுனியா ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

வவுனியா சேமமடு வினாயகபுரத்தைச் சோந்த கந்தையா கனகேந்திரம் என்பவரே இவ்வாறு கடியுண்டவர் ஆவார்.



அண்மையில் மட்டக்களப்பு மாவட்ட இந்து இளைஞர் பேரவையினால் இருநாள் வதிவிடக் கருத்தரங்கு மட்டக்களப்பு கலாசார மண்டபத்தில் நடைபெற்ற போது ஓய்வு பெற்ற முன்னாள் மேலதிக அரசாங்க அதிபர் இரா. நாகலிங்கம் அவர்களுக்கு சமய சமூகப் பணிகளை சிறப்பாக மேற்கொண்டமைக்க பேரவையின் தலைவர் சீ. யோகேஸ்வரன் அறப்பணி விருது வழங்கி பொன்னாடை போர்த்தி கௌரவித்தார். அருகே பேரவை பொதுச் செயலாளர் கா. மதிசுதன் ஆகியோரையும் மட்டக்களப்பு மாவட்ட கலாசார உத்தியோகத்தர் எஸ். தியாகராஜா நிகழ்வில் பங்குகொண்ட அறநெறிப்பாடசாலை ஆசிரியர் ஒருவருக்கு சான்றிதழ் வழங்குவதையும் படத்தில் காணலாம்.

## கனகசபை எம்.பி. களுவாஞ்சிகுடி பஸ் சாலை குறைபாடுகள் பற்றி ஆராய்வு

(ரகுலக்ஷனா)

மட்-களுவாஞ்சிகுடி பஸ் டிப்போ குறைபாடுகளை மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கனகசபை நேரிடையாகச் சென்று நிலைமைகளை பார்வையிட்டார்.

இவ்விஜயத்தின் போது களுவாஞ்சிக்குடி பஸ் சாலையில் நிலவும் குறைபாடுகளான நிரந்தர காணிவசதியின்மை, பணியாளர்களுக்கான குடி நீர் வசதியின்மை, மற்றும் பணியாளர்களது தொழில் அமைப்பு ரீதியான அந்தஸ்த்து இல்லாமை போன்ற பிரச்சினைகள் சுட்டிக்காட்டப்பட்டன.

இது தொடர்பாக சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு தீர்வு காண்பதற்கான நடவடிக்கைகளை எடுக்கவுள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் கனகசபை அவர்கள் தெரிவித்தார்.

# கல்வியின் பண்பு ரீதியான வளர்ச்சி நிலை

முதலாவது விடயம் பாடசாலைக் கல்வி மற்றும் உயர் கல்வி வாய்ப்புக்கள் எந்தளவிற்கு விரிவாக வழங்கப்படுகின்றன? குறிப்பாக கல்வி வாய்ப்புக்கள் எந்தளவிற்கு கல்வியில் காலம் காலமாக பின்தங்கி இருந்த பிரிவினர்களுக்குக் கிட்டுகின்றன? அதற்கென வகுக்கப்பட்ட கொள்கைகள் பற்றிய ஆய்வுகள் இதில் அடங்குகின்றன.

கல்வித் தராதரங்கள் உயர்ந்து காணப்பட்டால் மட்டும் போதாது கல்வி வாய்ப்புக்கள் சகல பிரிவினர்களையும் சென்றடைய வேண்டும். குறிப்பாக



பாடசாலைக் கல்வியை பொறுத்த வரையில் குறைந்த பட்சம் 5-14 வயது எல்லை வரையுள்ள பிள்ளைகளுக்கு கல்வி கட்டாயமாகவும் இலவசமாகவும் வழங்கப்படல் வேண்டும். என்று சென்ற நூற்றாண்டின் பிற்பகுதில் இருந்து வலியுறுத்தப்பட்டு வருகின்றது. இதன் அடிப்படையில் யாவருக்கும் கல்வி கட்டாயக் கல்வி, இலவசக் கல்வி எனும்




கொள்கைகள் இலங்கை உட்பட சகல வளர் முக நாடுகளையும் பொறுத்த வரையில் பரிந்து ரைக்கப் பட்டன.

கல்வி வாய்ப்புக்கள் சகல பிரிவினருக்கு எட்டும் எல்லையிலுள்ள பிள்ளைகள் சகலரும் பாடசாலையில் சேர்ந்து விட்டால் மட்டும் போதாது அவர்களுக்கு வழங்கப்படும் கல்வி சில குறிப்பிட்ட தராதரங்களை எட்டுதல் வேண்டும். பாடசாலைக் கல்வியானது பிள்ளைகளுக்கு சில அடிப்படையான தகைமைகளை வழங்கும் வகையில் திட்டமிடப்படல் வேண்டும் எழுத்தறிவு, எண்ணறிவு என்பனவற்றுடன் நூற்றாடல் பேணல், பல்லின சமூகத்தில் வாழ்தல், கற்பதற்கு கற்றல், ஒழுக்க உணர்வுகளைப் பேணல் போன்ற தகைமைகளையும் இலங்கை புதிய கல்விச் சீர்திருத்தங்கள் வலியுறுத்துகின்றன. இப்புலத்தில் 2002ம் ஆண்டில் இலங்கையின் கல்வி நிலை பற்றிய தொகை ரீதியான அம்சம் பற்றி முதலில் ஆராய்வோம்

***2002 பாடசாலைக் கல்வி***

பொருளாதார ரீதியில் இலங்கை ஒரு வளர்முக நாடாக இருந்த போதிலும் 2002ம் ஆண்டிலும் அதன் பாடசாலைக் கல்வி நிலை தென்னாசியாவில் மட்டுமன்றி ஏனைய வளர்முக நாடுகளுடன் ஒப்பிடும் பொழுது மிகச் சிறப்பானதாக இருக்கிறது குறிப்பாக 5-10 வயதுப் பிள்ளைகளை பொறுத்த வரையிலான மாணவர் சேர்வு வீதம் ஏறத்தாள 100% எட்டி வருகிறது

| நாடுகள் | வளர்ந்தோர் எழுத்தறிவு | பெண்கள் எழுத்தறிவு |
|---|---|---|
| 1. இலங்கை | 98% | 38% |
| 2. இந்தியா | 52.9% | 38% |
| 3. பாகிஸ்தான் | 38% | 25% |
| 4. வங்காளதேஷ் | 38% | 27% |
| 5. ஆக்கானிஸ் | 23% | 15% |

என்பது குறிப்பிடத் தக்க அம்சமாகும். யாவருக்கும் ஆரம்பக் கல்வி என்ற இலட்சியத்தை இலங்கை நெருங்கி விட்டாலும், போர் நிலைகளால் பாதிக்கப்பட்ட வன்னிப் பகுதியில் அதிகளவாக வாழும் பிள்ளைகள் மத்தியில் இத்தகைய கல்வி நிலை எட்டப் பட்டு விட்டதா என்பது ஐயத்துக்குரிய தாகும். அண்மைக் கால தகவல்களின் படி மலையகப் பகுதியில் ஆரம்ப நிலை மாணவர் சேர்வு வீதம் முன்னைய காலங்களை விட திருப்திகரமாக உள்ளதாகவே தெரிகின்றது.

மற்றுமொரு தகவலின் படி சராசரி இலங்கையர் ஒருவரின் கல்வித் தரம் தற்போது 7ம் வகுப்பு கல்வியாக இருப்பதாக தெரிகிறது. பிற நாடுகள் சிலவற்றுடன் ஒப்பிடும் போது இதன் முக்கியத்துவம் விளங்கும். சராசரி இந்தியாவின் கல்வித் தராதரம் 2 ஆண்டுகளை விட சற்று அதிகம் சராசரி சீனர் 5 ஆண்டுக் கல்வி பெற்றவர். அவ்வாறே தென்கொரியாவுக்கு தரம் 9 ஆண்டுக் கல்வி எனஇத் தரவுகள் கூறுகின்றது.அவ்வாறே 2002ம் ஆண்டில் இலங்கையின் எழுத்தறிவு வீதமும் தென்னாசிய நாடுகளுடன் ஒப்பிடும் போதும் அதிகமாக இருப்பது குறிப்பிடத் தக்கது.

தென்னாசிய நாடுகளின் எழுத்தறிவு இலங்கையின் எழுத்தறிவு வீதம் மட்டுமன்றி ஏனைய கல்வி தொடர்பான குறிகாட்டிகளைப் பொறுத்த வரையில் முன்னேறிய தென் கிழக்காசிய நாடுகளுடன் ஒப்பிடும்போது. சிறப்பாகவிருப்பது குறிப்பிடத்தக்கது.

1. இப்புள்ளி விபரங்கள் 1990களின் இறுதிப் பகுதிக்குரியவை ஆயினும் 2002ம் ஆண்டுக் குரிய கல்வி முறையின் போக்குகளை அறிய இவ் ஒப்பீட்டு தரவுகள் உதவுகின்றன.
2. ஆரம்ப நிலைக் கல்விக்குரிய தரவுகள் இலங்கை உட்பட பல நாடுகளுக்கு 100% மிஞ்சியுள்ளது. என்பதை கருத்திற் கொண்டு குறிப்பிட்ட ஆரம்பக் கல்வி வயதெல்லைக்குள் வராத வயது கூடிய மாணவர்கள் அந்நிலையில் கற்பதாகும்.
3. அட்டவணையிலுள்ள தரவுகள் பல மூலாதாரங்களில் இருந்து பெறப்பட்டவை உதார



வி.ரமேஷ், சிவானந்தா தேசியப்பாடசாலை

ணமாக யுனெஸ்கோவின் உலக நாடுகளின் கல்வி முறை பற்றிய அறிக்கைகள், ஆசிய நாடுகளின் ஆண்டுப் புள்ளி விபரக் கையேடு, கொங்கொங்கிலிருந்து வெளிவரும் Far Easterd Economic Review சஞ்சிகை போன்றன. இவை 1990 களின் இறுதிக் கூற்றில் வெளி வந்தமை.

மேலே தந்துள்ள அட்டவணைகளின் படி உழுத்தறிவு, ஆரம்ப நிலைக் கல்வி, இடைநிலைக் கல்வி என்பவற்றின் தொகை ரீதியான அம்சம் இலங்கை நாடானது தென்னா சிய நாடுகளில் உயர்ந்து காணப்படுகிறது.

அத்துடன் இலங்கை பற்றிய இக்குறி காட்டிகள் ஏறத்தாள இலங்கையின் கல்வி முன்னேற்றம் சம அளவாக உள்ளது மலே சியா, தாய்லாந்து முதலிய நாடுகளின் தலா வருமானம் இலங்கையை விட அதிகமாக இரு ப்பினும் கல்வித்

| நாடுகள் | எழுத்தறிவு | ஆரம்ப நிலை மாணவர் சேர்வு | இடை நிலை மாணவர் சேர்வு | உயர் நிலை மாணவர் சேர்வு |
|---|---|---|---|---|
| 1. இலங்கை | 93% | 105% | 74% | 06% |
| 2. இந்தியா | 85% | 114% | 43% | 10% |
| 3. பாகிஸ்தான் | 86% | 93% | 60% | 07% |
| 4. வங்காளதேசஷ் | 94% | 99% | 39% | 19% |
| 5. ஆக்கானிஸ் | 95% | 112% | 77% | 29% |

துறையில் இலங்கை பின்நிற்கவில்லை

எவ்வாறாயினும் உயர் கல்வியைப் பொறுத்த வரையில் இலங்கை ஒரு பின் தங்கிய நாடாகவே உள்ளது. பிலிப்பைன்ஸ், தாய்லாந்து, மலேசியா முதலிய நாடுகள் இலங்கையை விட அதிக சதவீதத்தில் இளைஞர்களுக்கு உயர் கல்வி வாய்ப்புக்களினை வழங்கியுள்ளன. என்பது குறிப்பிடத்தக்கது. இதுபற்றி பின்னர் விரிவாக விளங்குவோம்.

அண்மைக் காலங்களில் பிறப்பு வீதத்தில் ஏற்படும் வீழ்ச்சி காரணமாக பாடசாலை மாணவர்களின் தொகை வீழ்ச்சியடைந்துள்ளது. இதற்கு எடுத்துக் காட்டாக 1997ல் 43 லட்சமாக இருந்த மாணவர் தொகை 2001ம் ஆண்டு 41,80000 ஆகக் குறைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. அண்மைக் கால உலக வங்கி அறிக்கைகளில் எதிர்காலத்தில் (2010) இத்தொகையானது 35 லட்சம் வரை குறையும் வாய்ப்புக்கள் காணப்படுகின்றன.



இத்தகைய முறையில் பாடசாலை மாணவர் தொகை வீழ்ச்சியடைந்தாலும் அண்மைக்காலப் போர் நிலமைகள் நகர்ப்புறப் பாடசாலைகள் பெற்று வரும் முக்கியத்துவம் தூரப் பிரதேசங்களிலும், கஸ்ரப் பிரதேசங்களிலும் உள்ள சிறிய பாடசாலைகளிலும் வசதிக் குறைவு முதலிய காரணங்களினால் பல பாடசாலைகள் மூடப்பட்டு வரும் நிலைமையும் 2002ம் ஆண்டில் தெரிய வந்துள்ளது. கிடைக்கப் பெறும் புள்ளி விபரங்களின் படி 1997ல்நாட்டில் காணப்பட்ட பாடசாலைகளின் தொகை 10191. ஆனால் கல்வியமைச்சின் தகவல்களின் படி 2002ம் ஆண்டின் பாடசாலைகளின் தொகை 9887 ஆகக் குறைந்துள்ளது. ஏறத்தாள 210 பாடசாலைகள் மூடப்பட்டுள்ளமை தற்போது தெரிய வந்துள்ளது. இவ்விடயம் பற்றிய ஆய்வுகளில் தேசிய கல்வி ஆணைக்குழு ஈடுபட்டுள்ளது.

அடுத்ததாக பெண்களின் கல்வி முன்னேற்றம் பற்றி நோக்குமிடத்து 2002ம் ஆண்டில் பாடசாலையில் பயிலும் மாணவர்க ளில் ஆண்களின் தொகையை விட பெண்களின் தொகை அதிகமாக இருப்பது குறிப்பிடத்தக்கது. கல்வியமைச்சின் தகவல்களின் படி 2001ம் ஆண்டில் பாடசாலை மாணவர்களில் பெண்களின் சதவீதம் 50.1 ஆகும் பெண்களின் தொகையானது ஏறத்தாள ஆண்களின் தொகையை விட 10,000 தால் அதிகமாக உள்ளது. அதிலும் தமிழ் மொழி பெண்களை விட அதிகமாக உள்ளது. ஆனால் சிங்கள மொழி மாணவர்களைப் பொறுத்த வரையில் ஆண் மாணவர்களின் தொகையை விட பெண்களின் தொகை அதிகமாக உள்ளது. இதற்கான காரணங்களை ஆராய சமூகவியல் அறிஞர் கள் முற்பட வேண்டும் எவ்வாறாயினும் தென்னாசியாவில் இலங்கை போன்று வேறு எந்த நாட்டிலும் பாடசாலைக் கல்வியில் இவ்வாறு (குறிப்பாக 2001,2002) பெண்களின் பனங்களிப்பு அதிகமாக இருக்க முடியாது. என்பதை உறுதியாக கூறமுடியும். இதற்கான காரணத்தை சற்று உத்தேசமாக கூறுவதாயின் சிங்களவர்களில் ஆண்கள் பாடசாலை கல்விச் சமுதாயத்தில் பல்வேறு வேலை வாய்ப்புக்களைப் பெறுவதற்கான சந்தர்ப்பங்கள். (குறிப்பாக இராணுவ சேவையில்) இருப்பதால் அவர்களுடைய தொகை குறைந்திருக்கலாம். அவ்வாறே தமிழ் மாணவர்களைப் பொறுத்த வரையில் சில குறிப்புக்களை கூற முடியும்.

வடகிழக்கு மாகாணத்தில் உள்ள சகல மாவட்டங்களில் மட்டுமன்றி ஏனைய மலையக மாவட்டங்கள் இவை தவிர ஏனைய முஸ்லிம் மக்கள் வாழ்கின்ற மாவட்டங்கள் எல்லாவற்றிலும் ஆண் மாணவர்கள் தொகை சற்று அதிகமாக உள்ளது. என்பதைக் குறிப்பிட வேண்டும் புள்ளி விபரரீயாக பார்க்குமிடத்து இன்று நாட்டில் 9887பாடசாலைகள் உள்ளன. ஆனால் இவை யாவும் சம வசதிகளையோ அல்லது 1-13 வரையான பாடசாலையாக இயங்க வேண்டுமாயின் அவை 1-13 வரை யான எல்லா வகுப்புக்களையும் கொண்டு அமைபவையல்ல ஒரு பாடசாலை முழுமை யான பாடசாலையாக இயங்க வேண்டுமாயின் உயர்தரத்தில் பின்வரும் 3 பிரிவுகளை கொண்டிருக்க வேண்டும். கலைப் பிரிவு, வர்த்தகவியல்ப்பிரிவு, விஞ்ஞானப் பிரிவு என்பன.

தொடரும்......

எமது ஈழநாதம் (மட்டக்களப்பு பதிப்பு) பத்திரிகையில் செவ்வாய் கிழமை தோறும் கல்விக் களம் எனும் பகுதியினை ஆரம்பித்துள்ளோம். இப் பகுதியில் எம் தமிழீழத்தில் உள்ள கல்வியாளர்கள், கல்விமான்களிடத்து இருந்து எம் கல்விச் சமூகம் எதிர் கொள்ளும் பிரச்சினைகள் எவை? அப் பிரச்சினைக்கான காரணங்கள் எவை? அப்பிரச்சினைகளை தீர்க்கும் வழிமுறைகள் அப் பிரச்சனை தீர்க்கப்படா விட்டால் எதிர் காலத்தில் எம் சமூகத்தில் ஏற்படும் தாக்கம் போன்றவற்றின் ஆக்கங்களை எதிர் பார்க்கின்றோம். எனவே இது சம்மந்தமான உங்கள் கருத்துக்கள் ஆலோசனைகளை கீழ் காணும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.

**கல்விக் களம்**
**ஈழநாதம் மட்டக்களப்பு பதிப்பு**
**பிரதான வீதி**
**கொக்கட்டிச்சோலை**

# இந்திய நாடாளுமன்றத்தை சுற்றி அதிரடிப்படை குவிப்பு நாளை எம்பிக்கள் பதவிப் பிரமாணம்

புதுடெல்லி மே 31-

14-வது மக்களவை கூட்டம் நாளை மறுநாள் (புதன் கிழமை) தொடங்குகிறது. அன்று புதிய எம்.பி.க்கள் பதவி ஏற்பார்கள்.



தற்காலிக சபாநாயகர் சோம் நாத் சட்டர் ஜி அவர்களுக்கு பதவி பிரமாணம் செய்துவைக்கிறார். மக்களவைக்கு வரும் எம்.பி.களுக்கு இதுவரை இல்லாத அளவு பாதுகாப்பு ஏற்பாடு செய்யப்பட்டு உள்ளது.

முன்னர் 2001-ம் ஆண்டு டிசம்பர் 13-ந் தேதி தீவிரவாதிகள் பாராளுமண்ற கட்டிடத்தில் தாக்குதல் நடத்தியது போன்ற சம்பவம் மீண்டும் நடக்காது தடுக்க அனைத்து நவீன பாதுகாப்பு ஏற்பாடுகளும் செய்யப்பட்டு உள்ளது.

வீடியோ காமராக்கள் பொருத்தப்பட்டு உள்ளது. தீவிரவாதிகள் தாக்கிவிட்டு வாகனத்தில் தப்பி விடாது சக்கரத்தை பஞ்சர் ஆக்கும் கருவி பாராளுமன்றம் அருகே வீதிகளில் பொருத்தப்படுகிறது. பாராளுமன்றம் உள்ளே பாதுகாப்பு அதிகாரிகள் நவீன கண்காணிப்பு கருவிகளை வைத்து இருப்பார்கள்.

பாராளுமன்ற கட்டிட எல்லைக்கு வெளியே டெல்லி பொலிசார் பாதுகாப்பு ஏற்பாடுகளை செய்கிறார்கள். தீவிரவாதிகளை தீர்த்துக்கட்டும் அதிரடிப்படை பாராளுமன்றம் அருகே நிறுத்தப்படுகிறது. உயர்மட்ட ரோந்துப் படையும் பணியில் ஈடுபடுத்தப்படும். பாதுகாப்பு ஏற்பாடுபற்றி உயர் அதிகாரி ஒருவர் கூறுகையில் டிசம்பர் 13ந்திகதி தீவிரவாதிகள் தாக்குதலுக்கு பிறகு பாராளுமன்றத்தில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டு உள்ளது. இப்போது அது மேலும் வலுப்படுத்தப்பட்டு இருக்கிறது.

பாராளுமன்ற நுழைவு வாயிலில் அரண் போல் நிற்கும் பாதுகாப்பு படையை தாண்டி உரிய அனுமதி இன்றி யாரும் நுழைய முடியாது. பாராளுமன்ற கட்டிடங்கள் உள்ள 8 ஏக்கரிலும் அதிரடிப்படை வென்களில் சுற்றிவரும் என்றார். வழக்கம்போல் நமது எம்.பி.க்கள் பாதுகாப்புக்கு போதிய ஏற்பாடுகளை செய்து உள்ளோம் என்று டெல்லி போலிஸ் ஆனையாளர் அனிதா ராய் கூறினார்.

# இந்தியாவில் கள்ளவாக்கு பதிவை தடுக்க புகைப்படத்துடன் கூடிய வாக்காளர் பட்டியல்

புதுடெல்லி மே. 31-

வாக்குப்பதிவின்போது ஆள்மாறாட்டத்தை தடுக்க போட்டோவுடன் கூடிய வாக்காளர் பட்டியல் வெளியிட தேர்தல் கமிஷன் ஏற்பாடு செய்து உள்ளது. தற்போது வாக்காளர்களுக்கு புகைப்படம் ஒட்டிய அடையாள அட்டை கொடுக்கப்பட்டு உள்ளது. இதையும் மீறி ஆள் மாறாட்டம் செய்து கள்ள வாக்குப்போட்டு வருகிறார்கள்.

அதை தடுக்க தேர்தல் கமிஷன் புதிய ஏற் பாட்டை செய்துள்ளது. இது பற்றி தலைமை தேர்தல் கமிஷனின்முதன்மை செயலாளரும் இயக்குனருமான ராஜேஷ் அகர்வால் அளித்த பேட்டியில் கூறியதாவது.

வாக்குப்பதிவின்போது கள்ளவாக்கு போடுவதையும் ஆள் மாறாட்டம் செய்வதையும் தடுக்க வாக்காளர் பட்டியலில் அவர்களது போட்டோவையும் சேர்த்து அச்சிட்டு வெளியிட தேர்தல் கமிஷன் ஏற்பாடு செய்து உள்ளது. இந்தியா முழுவதும் இந்தப் புதிய திட்டத்தை அமுல்படுத்த தேர்தல் கமிஷன் முடிவு செய்து இருக்கிறது. இந்த ஆண்டு கடைசியில் நடக்க இருக்கும் சட்டசபை தேர்தலில் இந்த புதிய திட்டம் முதல்கட்டமாக நடைமுறைக்கு வரும்.

இந்தப் புதிய திட்டம் மூலம் வாக்காளர் பட்டியலில் உள்ள தவறுகள் அகற்றப்படும். தவிர போலி வாக்காளர்களை கண்டு பிடிக்க இது உதவும். ஒரே வாக்காளர் பெயர் 2 இடத்தில் இடம் பெறுவதையும் இந்தப்புதிய முறையால் தடுக்க முடியும். ஜிட்டல் முறையில் எடுக்கப்பட்ட 75 சதவீதம் வாக்காளர்களின் புகைப்படங்கள் தேர்தல் அதிகாரி வசம் உள்ளது. அவை வாக்காளரின் பெயர் மற்ற விவரங்களோடு ஒப்பிட்டு பார்க்கப்பட்டு வருகின்றன. மீதி வாக்காளர் களின் புகைப்படங் களை எடுப்பதற்கான பணிகள் விரைவில் தொடங்கும்.

இந்த புதிய திட்டம் மூலம் வாக்காளர் பட்டியல் தயாரிப்பு செலவு 50 முதல் 60 சதவீதம் வரை அதிகரிக்கும். தற்போதுள்ள முறைப்படி வாக்காளர் பட்டியலின் ஒரு பக்கத்தில் 50 பெயர்கள் வரை இடம் பெறுகின்றன. இனி போட்டோவுடன் கூடிய பெயரை அச்சிட வேண்டுமானால் ஒரு பக்கத்துக்கு 30 பெயர் தான் இடம் பெறமுடியும்.

தற்போது பல வாக்காளர்கள் போட்டோ ஒட்டிய அடையாள அட்டை இருந்தும் வாக்காளர் பட்டியலில் பெயர் இல்லாததால் வாக்குப் போட முடியவில்லை. இந்த குறையும் இனி சரி செய்யப்படும். கிராமப்புற மக்களுக்கு மின்னனு வாக்குப்பதிவு எந்திரங்கள் பற்றி விளக்கி சொல்லித்தரப்படும். மின்னனு வாக்குப்பதிவு எந்திரங்களைதவறாக பயன்படுத்தியதாலேயே சில ஓட்டுச்சாவடிகளில் மறுவாக்கு பதிவு நடத்த வேண்டியது உள்ளது.

# உலக செய்திகள்

## சவூதியிலுள்ள அமெரிக்கர்களை நாடுதிரும்புமாறு வேண்டுகோள்

(ராய்டர்)

சவூதியரேபியாவில் வசித்து வரும் அமெரிக்கர்கள் அனைவரும் உடனடியாக நாடுதிரும்பும்மாறு கோரப்பட்டுள்ளது. அமெரிக்கர்கள் உள்ளிட்ட மேற்கத்திய நாட்டவர்கள் மீதான தாக்குதலை தீவிரப்படுத்தப் போவதாக அல்கைதா பயங்கரவாத அமைப்பு அச்சுறுத்தல் விடுத்துள்ளது.




இதையடுத்து சவூதியில் றியாத் நகரிலுள்ள அமெரிக்க தூதரகம் மேற்கொண்ட வேண்டுகோளை நேற்று முன்தினம் விடுத்துள்ளது. சவூதியில் அல்கோபார் நகரில் மேற் கத்திய நாடுகளின் 3 இலக்குகள் தாக்கப்பட்டன.இதில் அமெரிக்கர்கள் சவூதியில் பிரஜைகள் இறந்தனர். சவூதியில் டெஹ்ரானில் உள்ள அமெரிக்க தூதரக அலுவலகம் நேற்று முன்தினம் மூடப்பட்டுள்ளது. றியாத,ஜெட்டா நகரிலுள்ள அமெரிக்க தூதரக அலுவலகம் வழக்கம் போல் செயற்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

# ராகுல் காந்தியை மணக்கப் போவது யார் ஐஸ்வர்யாராய் உட்பட ஐந்து அழகிகள் களத்தில்

புதுடெல்லி மே 31-

சோனியா காந்தியின் மகன் ராகுல் காந்தியை மணக்க உலக அழகி ஐஸ்வர்யா ராய் உட்பட 5 பெண்கள் போட்டி போடுகிறார்கள். ராஜீவ்-சோனியா தம்பதிகளின் மகன் ராகுல் காந்தி. 33



வயதையுடைய அவர் லண்டனில் படிப்பை முடித்து விட்டு சில காலம் அங்கு வேலை பார்த்து விட்டு இந்தியா திரும்பி வந்தார்.

இந்தியா திரும்பிய புதிதில் அரசியலில் ஈடுபாடு எதுவும் இல்லாமல் குடும்ப வேலைகளை மட்டும் கவனித்துக் கொண்டு இருந்தார். 1999 மக்களவை தேர்தலின் போது அரசியலில் லேசாக அடி எடுத்து வைத்து தனது தாயார் போட்டியிட்ட அமேதி தொகுதியில் தேர்தல் வேலைகளை கவனித்தார். நடந்து முடிந்த மக்களவை தேர்தலில் தீவிர அரசியலில் குதித்து அமேதி மக்களவை தொகுதியில் போட்டியிட்டு அமோக வெற்றி பெற்று எம்.பி.யும் ஆனார். திருமண வயதை தாண்டிவிட்ட நிலையில் இருக்கும் ராகுலின் வாழ்க்கையில் இனி அடுத்த முக்கியமான கட்டம் திருமணம்தான்.

நல்ல குடும்பத்தில் பிறந்து அழகும், கல்வி அறிவும் பெற்ற ராகுலை மணக்க பெண்கள் போட்டி போட்டு கியூ வரிசையில் நிற்கிறார்கள். அவர்களில் ஒருவர் 'பி' வயது கார்த்தினா. மாடல் அழகியும் நடிகையுமான இவர் ராகுல் லண்டனில் வேலை பார்த்தபோது இவரும் அங்கு இருந்தார். அப்போது இருவரும் சந்திப்பதற்கான வாய்ப்புகள் இருந்தன. ஆனால் சந்தித்தார்களா என்பது தெரியவில்லை.

கார்த்தினாவின் தந்தை காஷ்மீரையும். தாயார் இங்கிலாந்தையும் சேர்ந்தவர். ராகுலின் மூதாதையரும் காஷ்மீரை சேர்ந்தவர்கள்தான் என்பது குறிப்பிடத்தக்கது. நீலநிற கண்களை உடைய கார்த்தினா ராகுலை மணக்கும் வாய்ப்பு உள்ளதாக கூறப்படுகிறது. அடுத்து வரும் பெண் செலீனா. இவர் இந்திய அழகி பட்டம் பெற்றவர். காங்கிரசில் சேர்ந்த இவர் பல கூட்டங்களில் ராகுலுடன் நேருக்கு நேர் விவாதம் நடத்தும் வாய்ப்புப் பெற்றவர். அந்த தொடர்பினால் இவரும் ராகுலின் மனைவியாகும் வாய்ப்பு இருப்பதாக சொல்லப்படுகிறது.

3-வது இடத்தில் இருப்பவர் முன்னாள் உலக அழகி ஐஸ்வர்யா ராய். இணைய தளங்களில் வரும் இளம் இந்திய அரசியல்வாதியான ராகுல் பற்றிய விவரங்களை ஐஸ்வர்யாராய் ஆர்வமாக படிக்கிறார். அதேபோல ஐஸ்வர்யா ராய் விளம்பரம் கொடுக்கும் குளிர்பானங்களைத்தான் ராகுல் விரும்பி குடிக்கிறார். அதே சமயம் ராகுல்-ஐஸ்வர்யா ராய் இணைவதில் ஒரு வில்லன் குறுக்கே நின்றார். அவர்தான் நடிகர் விவேக் . ஐஸ்வர்யாராயை அடைவதற்காக அவர் இந்தி நடிகர் சல்மான்கானுடன் மோதியவர்.

ஆனால் விவேக் ஒரு விபத்தில் சிக்கி தற்போது ஓய்ந்து கிடப்பதால் ராகுலும் ஐஸ்வர்யா ராயும் இணைய தடை இல்லை. ராகுலை மணக்க 4-வது இடத்தில் இருப்பவர் கர்னா. இவரும் ராகுலும் ஹார்வர்டு பல்கலைக்கழகத்தில் ஒன்றாக படித்தவர்கள். அங்கே இருவரும் சந்தித்துக் கொண்டார்களா, கைகோர்த்து நடந்தார்களா காதலித்தார்களா என்பது தெரியாது.

# தமிழக ஆளுனர் ராம்மோகன் ராஜினாமா? புதிய ஆளுனராக ஜனார்த்தனன் ரெட்டி

(சென்னை. மே 31)

மத்தியில் பாரதிய ஜனதா ஆட்சியில் இந்தியா முழுவதும் உள்ள பல்வேறு மாநிலங்களில் பாரதிய ஜனதா ஆதரவாளர்கள்



ஆர்.எஸ் எஸ் இயக்க ஆதரவாளர்கள் ஆளுனர்களாக நியமிக்கப்பட்டார்கள். தமிழ் நாட்டில் ராம் மோகன்ராவ் ஆளுனராக நியமிக்கப்பட்டார். தமிழக ஆளுனர் ராம் மோகன் ராவ் ஆந்திராவைச் சேர்ந்த ஓய்வு பெற்ற டி.ஜி.பி. ஆவார். இவர் ஆந்திர முதலமைச்சர் சந்திரபாபு நாயுடுவுக்கு வேண்டியவர். இதனால் சந்திரபாபு நாயுடு பா.ஜ.கட்சி முக்கிய தலைவர்களிடம் சொல்லி தமிழக ஆளுனருக்கு சிபாரிசு செய்தார்.சந்திரபாபு நாயுடுவின் சிபாரிசை ஏற்று ராம்மோகன் ராவ் தமிழக ஆளுனராக நியமிக்கப்பட்டார். மத்தியில் பா.ஜ. கட்சி தோல்வி அடைந்து காங்கிரஸ் கூட்டணி ஆட்சி பொறுப்பு ஏற்று உள்ளது அல்லவா. இதனால் பா.ஜ. ஆட்சியில் நியமிக்கப்பட்ட பல மாநில ஆளுனர்கள் மாற்றப்படலாம் என்ற பேச்சு அடிபட்டது. குறிப்பாக ஆர். எஸ்.எஸ். ஆதரவாளர்கள் பலர் ஆளுனர்களாக நியமிக்கப்பட்டதை எதிர்க்கட்சிகள் வன்மையாக கண்டித்தன. தமிழ் நாட்டின் புதிய கவர்னராக ஜனார்த்தனன் ரெட்டி அல்லது ஆந்திர ஆளுனர் இருக்கும் பர்னாலா ஆகிய இருவரில் ஒருவர் நியமிக்கப்பலாம் என்று எதிர் பார்க்கப்படுகிறது.




## போரதீவு பிரதேசத்தில் பிரதேச விளையாட்டு விழா

(நமதுநிருபர்)

போரதீவுப் பற்று பிரதேச விளையாட்டுக் கழகங்களுக்கிடையிலான விளையாட்டு விழா சென்ற 28ம் திகதி வெள்ளிக்கிழமை பழுகாமம் பொது விளையாட்டு மைதானத்தில் பிரதேச செயலாளர் க. கருணாகரன் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக மட்டக்களப்பு மாவட்ட தமிழ்த் தேசிய கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்களான த.கனகசபை, பா.அரியநேத்திரன். சிறப்பு விருந்தினர்களாக மட்டு. அம்பாறை புகைப்பட பிரிவுபொறுப்பாளர் மதி கௌரவ அதிதிகளாக போரதீவுப் பற்று கோட்டக் கல்விப் பணிப்பாளர் எஸ். தில்லைநாதன் மாவட்டவிளையாட்டுத் துறை அதிகாரி வை.யாக்கத் அலி கண்டுமணி மகா வித்தியாலய அதிபர் சி.முருகேசு.ஆகியோர் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வில் 163புள்ளிகளைப் பெற்று களுமுந்தன் வெளி விநாயகர் விளையாட்டுக் கழகம் முதலாம் இடத்தினையும், 158 புள்ளிகளைப் பெற்று பழுகாமம் சூட்டிங்விளையாட்டுக் கழகம் இரண்டாம் இடத்தினையும் 33புள்ளிகளைப் பெற்று வெல்லாவெளி சக்தி விளை யாட்டுக் கழகம் மூன்றாம் இடத்தினையும் பெற்றுக் கொண்டது.

## அகில இந்திய கிரிக்கெட்டில் சரத் அபார சதம்

(சென்னை 31)

அகில இந்திய கிரிக்கெட் போட்டி சென்னையில் நடந்து வருகிறது. இந்தப் போட்டிக்கான நேற்றைய ஆட்டத்தில் குருநானக் மற்றும் சுந்தர் கழகம் ஆகிய அணிகள் மோதின. முதலில் துடுப்பெடுத்தாடிய குருநானக் கல்லூரி 3 விக்கெட்டுக்களை இழந்து 236 ஓட்டம் விளாசியது. தொடக்க வீரர் சரத் ஆட்டம் இழக்காமல் 104 ஓட்டங்கள் விளாசினார். பின்னர்களம் இறங்கிய சுந்தர்கழகம் 86 ஓட்ட ங்களுக்கு அனைத்து விக்கெட்டுக ளையும் இழந்தது. மணி 3 விக்கெட்டுகள் கைப்பற்றினார். மற்றொரு போட்டியில் லயோலா கல்லூரி வெற்றி பெற்றது. லொன் அட்ஸ் அணிக்கு எதிரான போட்டியில் லக்க ளையோலா வீரர் அஸ்ரத் 5 விக்கெட்டுக்களை வீழ்த்தி வெற்றிக்கு காரணமாக இருந்தார். அது போல் அமர் கழகத்துக்கு எதிரான போட்டியில் ஒய்.எஸ்.சி.ஏ. வீர் முகிலன் 5 விக்கெட்டுக்களை வீழ்த்தி வெற்றித் தேடிக் கொடுத்தார்.

## இந்திய பாட நூலில் சச்சினின் கிரிக்கெட் வரலாறு சேர்ப்பு

(சென்னை 31)

இந்திய கிரிக்கெட் அணியின் இளம் புயல் என்று வர்ணிக்கப்படும் சச்சின் டெண்டுல்கரின் பேட்டி ஒன்றை மத்திய அரசு 6-ம் வகுப்பு பாடத்தில் சேர்த்தது. இதே போல் தமிழ் நாட்டிலும் 10-ம் வகுப்பு ஆங்கில பாடத்தில் சச்சின்டெண்டுல்கரின் கிரிக்கெட் வாழ்க்கை பற்றிய பாடம் ஒன்று இந்த ஆண்டு இடம் பெற்றுள்ளது.

அந்தப் பாடம் ''தி மாஸ்டர் பிளாஸ்டர்'' என்ற தலைப்பில் வெளியிடப்பட்டுள்ளது. அந்த பாடத்தில் சச்சின் குழந்தை பருவத்தில் இரு ந்த போதே அவர் கிரிக்கெட் மீது கொண்டுள்ள ஆர்வம் குறித்த தக வல்கள் வெளியிடப்பட்டுள்ளது. மேலும் சச்சின் தனது முதல் டெஸ்ட் போட்டியை பாகிஸ்தானு க்கு எதிராக தொடங்கி இங்கிலா ந்தில் நடை பெற்ற 100-வது டெஸ்ட் போட்டி வரை விளையாடியதில் முக்கிய தகவல்களை 4 பங்காக பிரித்து வெளியிட்டுள்ளது.



கராச்சி-பாகிஸ்தான் என்ற முதல் பகுதி ஹிஸ்டரி இன்தி மேக்கிங் என்றும், சிவாசி பார்க்-மும்பை என்ற இரண்டாவது பகுதி திஸ்டெப் பிங்ஸ் டோன் என்றும் பந்ரா-மும்பை மூன்றாவது பகுதி திஸ்யர்லி டெஸட் என்றும், ஓல்டு டிரா போர்டு -இங்கிலாந்து என்ற பகுதி மாஸ்டர் பிளா ஸ்டர் என்றும் பிரித்து தகவல்கள் வெளியிட ப்பட்டுள்ளது. இது குறித்து தமிழக பள்ளிக்கல்வித்துறை அதிகாரிகள் கூறுகையில் சச்சின் டெண்டுல்கர் கிரிக்கெட் நாட்கள் பற்றிய பாடம் இடம் பெற்றுள்ளது. கிரிக்கெட் ரசிகர்களாக உள்ள மாணவர்களுக்கு பெரிதும் ஆர்வமுடையதாக அமைந்துள்ளது என்று கூறு கின்றனர். இது குறித்து மாணவர் ஒருவர் கூறுகையில் இந்த பாடம் எனது கிரிக்கெட் வாழ்க்கைக்கு வழிகாட்டியாக அமையும் என்றும் வருங்கால கிரிக்கெட் வீரர்களுக்கு பயனுள்ளதாக இருக்கும் என்றார்.

சச்சினின் கிரிக்கெட் வாழ்க்கை 10-ம் வகுப்பு பாடத்தில் வெளியாவது மாணவர்கள் மத்தியிலும், ஆசிரியர்கள் மத்தியிலும்பரபரப்பாக பேசப்படுகிறது. இது குறித்து ஆசிரியை ஒருவர் கூறுகையில் இந்த பாடம் நடத்துவது மாணவர்களுக்கு எளிதில் புரிந்து கொள்ளும் வகையில் அமையும் என்பதால் மாணவர்கள் இதனை விரும்பிபடிப்பர் என்பதில் ஐயமில்லை என்றார்.

## இங்கிலாந்து அணியில் மைக்கல்வோண் மீண்டும் விளையாட விருப்பம்

(நமது நிருபர்)

எதிர் வரும் வியாழக்கிழமை ஆரம்பமாகவுள்ள இங்கிலாந்து அணிக்கும் நியூசிலாந்து அணிக்கும் இடையிலான இரண்டாவது டெஸ்ட் போட்டிக்கான அணியில் தலைவர் மைக்கல் வோண் மீண்டும் விளையாடவுள்ளார்.

கடந்த போட்டியொன்றில் உவாதைக்குள்ளான மைக்கல் வோண் பூரண குணமடைந்துள்ளதாகவும் அவர் போட்டிகளில் பங்கு பற்றக் கூடிய நிலையில் அவரது உடல் நிலை இருப்பதாகவும் கூறிய அணித்தலைவர் தொடர்ந்து மீண்டும் விளையாட அழைக்கப்பட்டுள்ளார்.

அத்தோடு முதலாவது டெஸ்ட் போட்டியில் அவசரமாக துடுப்பெடுத்தாடி 103 ஓட்டங்களைப் குவித்திருந்த நிலையில் ஓய்வு பெற்ற நசார்குசைனுக்கு பதிலாக அன்ரிரோஸ் விளையாடவுள்ளார் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## வீதி அகலமாக்குவதற்கு அதிகாரிகள் அக்கறை செலுத்துவார்களா?

கிழக்குப் பல்கலைக் கழகத்திற்கு முன்னாலுள்ள பிரதான வீதி அகலப்படுத்தி வடிகான்கள் அமைத்து நடைபாதை ஒழுங்குகளை மேற்கொள்ளும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டிருந்த போதிலும் அது முற்றுப் பெறாது இருப்பது குறித்து அப்பிரதேச மக்கள் பெரும் விசனம் தெரிவிக்கின்றனர். கடந்த இரு வருடங்களுக்கு முன்னர் ஆரம்பிக்கப்பட்ட இந்தப் பாதை அகலப்படுத்தல் நடைபாதைகள் நிறுவி வடிகான் அமைக்கும் பணியானது பல்கலைக்கழகம் வரை இரு மருங்கிலும் மேற்கொள்ளப்பட்டு வந்த போதிலும் அதன் தொடர்ச்சியாக கொம்மாதுறை வரை கான் அமைப்பதற்காக குழிகள் வெட்டப்பட்டுள்ள போதிலும் அந்த குழிகளில் இன்று வரை வடிகான்கள் கட்டப்படாத நிலையிலுள்ளதோடு சில பகுதிகளில் கட்டப்பட்டுள்ள கான்கள் முற்றாக சீமெந்துப் பூச்சுக்கள் மேற்கொள்ளப்படாத நிலையில் இருப்பதனாலும் அந்தக் குழிகளில் மழை காலங்களில் நீர் தேங்கி நின்று துர்நாற்றம் வீசுவதுடன் பல நோய்கள் பரவும் அபாயமும் காணப்படுகிறது.

அத்தோடு பூர்த்தி செய்யப்பட்ட வடிகான்கள் வழியாக வரும் கழிவு நீர் குறித்த நிலப்பகு திகளைச் சேரமுடியாத நிலையில் இந்த நிர்மாண வேலைகள் இடை நிறுத்தப்பட்டுள்ளமையால் நீர் தேங்கி மக்களுக்கு பல அசௌ கரியங்களை ஏற்படுத்துவதோடு பல விபத்துக்களையும் ஏற்படுத்தும் வகையில் உள்ளதாக அப்பிரதேச மக்கள் குறை கூறுகின்றனர். எனவே குறித்த அந்த நிர்மான வேலைகளை குறித்த இலக்கு வரை பூர்த்தி செய்வதன் மூலம் இந்த மக்கள் எதிர் கொள்ளும் எத்த னையோ இன்னல்களுக்குத் தீர்வினைப் பெற்றுக் கொள்ள முடியும். எனவே சம்மந்தப்பட்ட அதிகாரிகள் கவனமெடுத்து அந்த இடைநிறுத்த ப்பட்ட நிலையிலுள்ள நடைபாதை மற்றும் வடிகான் அமைக்கும் பணிகளைப் பூர்த்தி செய்து தருமாறு கேட்டுக் கொள்கின்றேன்

கே.ஜே.கே

## வாழைச்சேனை வைத்தியசாலையில் பல்வேறு குறைபாடுகள்

வாழைச்சேனை மாவட்ட வைத்தியசாலை தரம்முயர்த்தப்பட்ட போதிலும் பல்வேறு குறைபாடுகள் நிலவுவதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. ஐநூறு வெளிநோயாளர்கள் தினசரி சிகிச்சை பெறுகின்றனர் முப்பது பேர் விடுதிகளில் தங்கியிருந்து சிகிச்சை பெறும் போதும் வைத்தியசாலையில் போதிய வசதியின்மை காணப்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

எக்ஸ்றே படப்பிடிப்புக்கான கருவிகள் பொருத்தப்பட்ட போதும் இதுவரை பிரிவு இயங்கவில்லலை. இதனால் வாகரை தொடக்கம் வாழைச்சேனை வரை சிகிச்சைக்காக வரும் நோயாளிகள் பெரும் சிரமங்களை அனுபவிக்கின்றனர். எனவே கூடிய விரைவில் வாழைச்சேனை எக்ஸ்றே கதிர் பிரிவினை இயங்க வைக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென கோரிக்கை விடுத்துள்ளனர்.

நலன் விரும்பி


### விளம்பர முகவர்களாக இதோ அரிய சந்தர்ப்பம்

தற்போது வாசகர்களிடத்தில் மிகுந்த வரவேற்பை பெற்றிருக்கும் ஈழநாதம் (மட்டக்களப்பு பதிப்பு) பத்திரிகையின் பிரதேச விளம்பர முகவர்களாக இணைந்து கொள்ள விரும்புகிறீர்களா?

அப்படியானால் எம்முடன் தொடர்பு கொள்ளுங்கள்.

+ அக்கரைப்பற்று.
+ கல்முனை.
+ களுவாஞ்சிகுடி.
+ மட்டக்களப்பு.
+ செங்கலடி.
+ வாழைச்சேனை.

ஆகிய இடங்களுக்கு எமது முகவர்கள் நியமிக்கப்படவுள்ளனர். நீங்கள் திரட்டும் விளம்பரங்களுக்கு தரகுப் பணம் வழங்குவதுடன் விசேட சலுகைகளும் கிடைக்கும். ஆர்வமுடையவர்கள் பின்வரும் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்.

நிர்வாகம்
ஈழநாதம் (மட்டக்களப்பு பதிப்பு)
பிரதான வீதி, கொக்கட்டிச்சோலை.
தொலைபேசி:-065-2226110, 065-2226303


## எங்கள் குரல்

## குப்பைகள் அகற்றுவதில் பாரபட்சம்

கல்முனை மாநகர சபைக்கு உட்பட்ட மணற்சேனை, பாண்டிருப்பு ஆகிய பிரதேசங்களில் இதுவரையும் மாநகர சபையினால் எதுவித குப்பைகளும் அகற்றப்படவில்லை. இருந்தும் இப்பகுதிகளில் உள்ளவர்களிடமும் மாநகர சபையினால் பண அறவீடு நடைபெறுகின்றது.

இவ்வாறு இவர்கள் குப்பைகளை அகற்றுவதில் பாராமுகமாக இருப்பதனால் இப்பிரதேச வீதிகள், பொது இடங்கள் என்பனவற்றில் குப்பைகள் பெருகி வருகின்றன. இனிவரும் காலங்களிலாவது இப்பிரதேச வீதிகளில் உள்ள குப்பைகளை அகற்றி சுத்தமான காற்றைச் சுவாசிக்கவும், நோயற்ற வாழ்வு வாழவும் மாநகர சபையினர் உரிய நடவடிக்கை எடுக்குமாறு கேட்கப்படுகிறார்கள்.

கே.சிவசுதன்

## நாவிதன்வெளி பிரதேசத்தில் மின்சார வசதியின்மை

நாவிதன்வெளி பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள 7ம் கிராமம் அன்னமலை வீட்டுத்திட்டம், குடியிருப்புமுனை, வீரச்சோலை ஆகிய கிராமங்களுக்கு இதுவரை காலமும் மின்சாரம் வழங்கப்படவில்லை. இங்கு உள்ள மாணவர்கள் படிப்பதற்கு குப்பி விளக்கினைப் பயன்படுத்துகின்றார்கள் இதனால் இவர்கள் பல ஆபத்துக்களை சந்திக்கும் வாய்ப்பு உண்டு சில மாணவர்கள் பரிதாபகரமான முறையில் தீப்பிடித்து மரணமாகியும் உள்ளனர்.

மற்றும் அரச, அரசசார் பற்ற நிறுவனங்களில் கடமை புரிபவர்களும். குப்பிவிளக்கினைப் பயன்படுத்தி தமது வேலைகளை செய்கின்றார்கள். மற்றும் இப்பிரதேசங்களில் பல ஆலயங்கள் உள்ளன. அவற்றுள் 7ம் கிராமம் சித்தி விநாயகர் ஆலயம் போன்ற ஆலயங்களில் திருவிழாக் காலத்தில் மின்சாரம் இல்லாததன் காரணமாக மின்பிறப் பாக்கி செலவுக்காக பதினையாயிரம் ரூபாய் தேவைப்படுகின்றது. இதனால் ஆலயத்தினுடைய பொருளாதார வளர்ச்சி குன்று கின்றது. மாணவர்களுடைய கல்வி நடவடிக்கை பாதிப்படைகின்றது. இது சம்பந்தமாக சம்பந்தப்பட்டவர்கள் உடனடியாகக் கருத்திற்கொண்டு இப்பிரதேசங்களுக்கு மின்சாரம் வழங்க ஏற்பாடு செய்யவும்.

நலன் விரும்பி



## சிந்தனைக்கு

தமிழீழத் தனியரசே தமிழ் மக்களின் தேசிய இனப்பிரச்சினைக்கு இறுதியான, உறுதியான தீர்வு என்பதில் எமக்கு அசையாத நம்பிக்கையும் தெளிவும் உண்டு. எமது நிலைப்பாட்டை எமது எதிரி மட்டுமன்றி,முழு உலகமும் நன்கறியும்.

**தமிழீழத் தேசியத் தலைவர்**


# ஈழநாதம்

மக்கள் தினசரி மட்டக்களப்பு பதிப்பு

பிரதான வீதி, கொக்கட்டிச்சோலை.
தொலைபேசி:- 065-2226110
065-2226303
batti@eezhanatham.com
01.06.2004


## தமிழ் ஊடகத்துறைக்கு பேரிழப்பு

தமிழ் ஊடகத்துறை வரலாற்றில் சிறந்ததொரு பிராந்திய செய்திளராக விளங்கிய ஜி. நடேசன் நேற்றுக்காலை மட்டக்களப்பில் சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவம் தமிழ் ஊடகவியலாளர்களை பெரும் அதிர்சிக்குள்ளாக்கியுள்ளது.

தமிழ் தேசியத்துக்காக பேனாமுனையால் சாதனை படைத்த இந்த செயல் வீரனின் எழுத்துக்களை கருத்து க்களை எதிர் நின்று ஏற்க முடியாத தேச விரோத சத்திகள் துப்பாக்கிக் குண்டால் விடைபகின்றது மிகக் கோழைத்தனமான மிலேசத்தனமான செயல் இதனை வன்மையாகக் கண்டிக்கின்றோம். அரச பணியாளராக விருந்த போதும் அமரர் ஜி. நடேசன் ஊடகத்துறையில் மிகப் பிரபல்யம் மிக்க ஒருவர் .

தமது வாழ் நாளில் ஓய்வு என்ற ஒன்றை எண்ணிப்பார்க்க இந்த ஊடகவியலாளனால் முடியவில்லை தேடல் என்னும் அருங்கலையின் நூனுக்கங்கள் நடேசனுக்கு மட்டும் சொந்தமோ என்னவோ எந்த மூலை முடுக்கில் நடக்கும் சம்பவங்களெல்லாம் அவரது பேனா முனையால் வெளிக் கொணரப்பட்டதென்பது ஊடகத்துறை வரலாற்றில் பதியப்பட்ட தடயங்கள் பெறுமனே பிராந்திய செய்தியாளர் என்றவரையறைக்கு அப்பாற்பட்டு ஈழத்தின் சிறந்த கட்டுரையாளர்களில் ஒருவராக விளங்கினார் அவரது கட்டுரைகளில் யதார்த்தம் சமுகத்தில், அரசியலில் பல்வேறு தாக்கங்களை உண்டு பண்ணியது என்பது உண்மை கொழும்பிலிருந்து வெளிவரும் தேசிய நாள் இதழ் ஒன்றின் பிராந்திய செய்தியாளராக வலம் வந்த அவர் தனியார் ஒளி ஒலிபரப்பு ஊடகங்களிலும் பிராந்திய செய்தியாலாளராக இணைந்து கொண்டதுடன் மட்டுமன்றி ஐ.வி.சி வானொலி செய்தியாளராகவும் தடம் பதித்தவர்.

அவரது செய்திகள், கட்டுரைகளின் காத்திரமான தன்மையும், சுறுசுறுப்பும் மறுமுனையில் தேசவிரோத சத்திகளின் பார்வையில் விழுந்திருந்ததென்பது உண்மை அதன் காரணமாக போர்காலச் சூழலில் அவருக்கு அச்சுறுத்தல் இருந்தமை குறிப்பிடத்தக்கது. அவரது வீடு மீது கைக்குண்டு வீசப்பட்டது என்பது இங்கு சுட்டிக்காட்ட வேண்டிய விடயம் ஆயினும் நடேனின் பேனாமுனை ஒய்ந்து விடவில்லை தமிழ் தேசிய விடுதலைக்கான உணர்வுகளை அவர் பேனா முனையால் மிகத் துல்லியமாக வெளிக்கொண்டிருந்தார். இவை மட்டுமின்றி தமது கட்டுரைகளின் பெறுமதியை தமிழ் சமுகம் கற்று உணரவேண்டும் எனும் நோக்கில் கட்டுரை தொகுப்பு நூலாக வெளியிட்டார்.

இவரது கட்டுரை நூல்களில் இனமுரன்பாடுகளின் வரலாறு கட்டுரை தொகுப்பு நூல் தமிழ் சமூகத்திற்கு பயனளித்துள்ளமை உண்மை இப்போர் ஓய்வு நிலையில் சமாதானக் காற்றை நுகரமுடியுமோ என்ற ஆதங்கம் மக்கள் மனங்களில் ஐயத்தை ஏற்படுத்திய சூழ்நிலையில் தொடர்படுகொலை களத்தில் மற்றுமொரு அரங்கேற்றமாக நடேசன் அவர்கள் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

இது தமிழ் ஊடகத்துறைக்கு விழுந்த மிகப் பெரிய பேரிழப்பு வடக்கே நிமலராஜனின் படுகொலைவடுதமிழ் ஊடகத்துறை வரலாற்றில் மாறாத றணமாய் இருக்கும் நிலையில் மற்றொரு பேரிழப்பு நிகழ்ந்துள்ளது. சிறிலங்கா அரச கட்டுப்பாட்டு பகுதிக்குள் சிறிலங்கா படைத்தரப்பின் உச்சக்கட்ட பாதுகாப்பு வலயத்துக்குள் இந்தப் படுகொலை நிகழ்ந்துள்ளதால் இதன் முழுமையான பொறுப்பையும் சிறிலங்கா அரசே ஏற்கவேண்டும். அத்துடன் இத்தொடர் படுகொலைகளில் சூத்திரதாரிகள் பாரபட்சமின்றி சட்டத்தின் முன் நிறுத்த சிறிலங்கா அரசு பின்னடிக்கக் கூடாது.

# அம்பாறை மாவட்டத்தை அபிவிருத்தி செய்ய இரு தமிழ் எம்.பிக்கள் வேண்டும்

## தேசியத் தலைவருக்கும் வேண்டு கோள்

(வேதசகா)

அம்பாறை மாவட்ட தமிழ் மக்களின் உரிமைகளுக்காய் குரல் கொடுக்க நியமனப்பட்டியல் எம்.பி ஒருவரும் நியமிக்கப்பட வேண்டும். இவ்வாறு தேசியத்தலைவர் மேதகு வே.பிரபாகரனிடம் கோருவதற்கு வட-கிழக்கு மாகாண ஜீவோதயநலன்புரி நிறுவனம் தீர்மானம் நிறைவேற்றியுள்ளது.

ஜீவோதய நிறுவனத்தின் அதியுயர் பீடக் கூட்டம் ஞாயிறன்று தலைவர். எஸ்.லோக நாதன் தலைமையில் கல்முனை உவேஸ்லக் கல்லூரியில் நடை பெற்றது. அங்கு நிறைவேற்றப் பட்ட ஏனைய தீர்மானங்களாவன கல்முனை ஆதாரவைத்தியசாலை பொது வைத்திய சாலையாக தரமுயர்த்த போராட முடிவு.

கல்வி அமைச்சுக்கும் புனர்வாழ்வு புனரமைப்பு, அமைச்சுக்கும் தனி அமைச்சர்கள் நியமிக்க கோருதல் முஸ்லிம் விவகார அமைச்சுக்கும் நியமிக்க கோருதல் அம்பாறை உள்ளிட்ட வட-கிழக்கில் இடை நிறுத்தப்பட்ட உலருணவு விநியோகத்தை தொடர்ந்து நடத்த அரசிடம் வேண்டுவது. சமாதான நடவடிககையை தொடர்ந்து முன்னெடுத்துச் செல்ல அரசினை வலியுறுத்தல். கல்வியில் அரசியல் தலையீட்டை தடுக்க மனு. தொண்டராசிரியர் பட்டியலை வெளியிட கோருதல்.

# அம்பாறை மாவட்டத்தில் பழைய இரும்புகளுக்கும் தட்டுப்பாடு

(சிவா)

நாட்டின் சமாதானச் சூழலைத் தொடர்ந்து இடை நிறுத்தப்பட்டுள்ளது கட்டிட வேலைகள் ஆரம்பமாகி உள்ளதால் கட்டடப் பொருட்களின் தேவை அதிகரித்துள்ளன. இந்த வகையில் கட்டடத் தேவைகளுக்கு மிக முக்கியமாகத் தேவைப்படும் இரும்பு விலையும் அதிகரித்துள்ளது.

எனினும் உலக நாடுகளில் சந்தையில் இரும்பின் விலை திடீர் என அதிகரித்துள்ளதால் அம்பாறை மாவட்டத்திலும் இரும்புக்கான விலைகள் திடீரென அதிகரித்துள்ளதாக வியாபாரிகள் வாடிக்கையாளர்களிடம் கூறியுள்ளனர்.

இதனால் பழைய இரும்புக்கான கேள்வியும் அது தொடர்பான வியாபார நடவடிக்கைகளும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

புதிதாக பல வியாபாரிகள் பழைய இரும்புகளைக் கொள்வனவு செய்யும் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள தாக கிராமப்புறங்களில் சாதாரணமாகக் காணக்கூடியதாக உள்ளது.

# மணல் கும்பத்தடிச் சந்திக்கு பஸ் சேவை இல்லாததால் மக்கள் குமுறல்

(நமது நிருபர்)

நாவிதன் வெளி பிரதேசசெயலாளர் பிரிவிலுள்ள மணல் கும்பத்தடிச் சந்திக்கு கல்முனையில் இருந்து போக்குவரத்துச் சேவை நடத்தப்பட வேண்டுமென இப்பிரதேச மக்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர்.

கடந்த இருவருடங்களுக்கு முன்னர். இச் சந்திக்கான போக்குவரத்துச் சேவை ஒன்று ஆரம்பிக்கப் பட்ட போது இருநாட்களில் இப் பஸ் சேவை இடை நிறுத்தப்பட்டதாகவும் பயணிகள் தெரிவிக்கின்றனர்.

இப் பஸ் சேவை நடைபெறாததால் விசிக்கிராமம், சவளக்கடை,7ம் கிராமம்,11ம்கிராமம்,15ம் கிராமம், ஆகிய கிராமங்களில் வசிக்கும் பொதுமக்களும், மாணவர்களும் மற்றும் அரச ஊழியர்களும் பெரும் பாதிப்படைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# அம்பாறை மாவட்டத்தில் உலக வங்கி உதவியுடன் நீர்பாசனத் திட்டம்

(வி.பி.சிவப்பிரகாசம்)

அம்பாறை மாவட்டத்தில் பாரிய நீர்பாசனத்திட்டமாக கெடோயாத்திட்டம் ஆரம்பிக்கப்பட விருக்கிறது. இது தொடர்பாக உலக வங்கியின் அதிகாரிகள் ஆய்வு செய்து திட்டம் தயாரித்துள்ளார்கள். நிதி ஒதுக்கீடு கிடைத்ததும் நீர்ப்பாசன தினைக்களம் உலக வங்கியின் பொறியியலாளர்களின் அனுசரனையுடன் மேற்கொள்ளப்படவிருக்கிறது.

இந்த திட்டத்தின் மூலம் பொத்துவில், லகுகலைப் பகுதியிலுள்ள அதிகமான ஏக்கர் நிலங்களுக்கு நீர்பாசன வசதிகள் கிடைக்க விருப்பத்துடன் பாணமை. லுகுகலை, பொத்துவில் ஆகிய பகுதிகளில் குடியேற்றத்திட்டங்களும் ஆரம்பிக்கப்படவிருக்கிறது.

கெடோயாத்திட்டம் ஆரம்பிக்கப்படவேண்டுமென பொத்துவில் பகுதி விவசாயிகள் கடந்த கால் நூற்றாண்டுக்கு மேல் அரசாங்கத்தின் கவனத்தில் கொண்டுவந்திருந்தார்கள். அவர்களின் வேண்டுகோளுக்குப் பதிலாக முத்து கண்டித் திட்டம் ஆரம்பிக்கபபட்டு மொனறாகலை மாவட்ட விவசாயிகளுக்கு நீர்பாசன வசதிகள் செய்து கொடுக்கப்படாமையினால் பொத்துவில் பகுதி விவசாயிகள் சிறுபோக நெற்செய்கைக்காக இயற்கையாக கிடைத்து வந்த நீர்ப்பாசன வசதிகள் இல்லாது போய்விட்டது என்று விவசாயிகள் தெரிவிக்கின்றார்கள்

இதே காலகட்டத்தில் சேனநாயக்கா சமுத்திரத்தின் அனைக்கட்டிடன் அபிவிருத்தி வேலைகளும்60 ஆண்டுகளுக்குப்பின்பு ஆசிய அபிவிருத்தி வங்கியின் உதவியுடன் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. எதிர் வரும் டிசம்பர் மழைக்கு முன்பு இந்த வேலைகள் செய்து முடிக்கப்படுமென்று எதிர்பார்க்கப்படுகின்றது. சேனாநாயக்கா சமுத்திரத்தின் வலதுபுற. இடதுபுற பிரதான வாய்க்கால்களும் அபிவிருத்தி செய்யப்படும்.

வலது புறவாய்க்கால் அறுகம்பைக்குடா வரைக்கும், இடதுபுற வாய்க்கான் உண்ணிச்சைக்குளம் வரைக்கும் விஸ்தரிப்பதற்கான திட்டமொன்றும் தயாரிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் இந்த திட்டம் இன்று, நேற்றையகதை யல்ல கடந்த 30 வருடங்ஙளாக பேசப்படும் ஒரு திட்டம். இந்த வருடத்திலாவது இந்த திட்டம் ஆரம்பிக்கப்படுமெனறு விவசாயிகள் நம்புகின்றார்கள். இந்த வாய்க்கால்கள் விஸ்த்தரிப்பு மூலம் குடிநீர்ப்பிரச்சனைகளுக்கு நீர்க்க முடியுமென எதிர்பார்க்கப்படுகிறது

# உற்சவ கூட்டம்

(நமது நிருபர்)

களுமுந்தன் வெளி ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலையப் பரிபாலன சபைக்கூட்டம் ஞபயிற்றுக்கிழமை ஆலயப்பரிபாலன சபைத்தலைவர் துரைசிங்கம் தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் உற்சவகாலத்தில் மேற்கொள்ள வேண்டிய விடையங்கள் குறித்து ஆராயப்பட்டது.



களுவாஞ்சிகுடி சக்தி இல்ல மாணவர்கள் அண்மையில் பாசிக்குடாவிற்கு கடல் குளிப்பிற்குச் சென்றபோது எடுக்கப்பட்ட படம்

ஈழநாதம்
மட்டக்களப்பு பதிப்பு மக்கள் நாளிதழ்
Eezhanatham

# ஜே.வி.பி. சுமத்திய குற்றச்சாட்டுக்கள் ஜனாதிபதியால் நிராகரிப்பு!

(நமது நிருபர்)

அரசாங்கம் அமைக்கப்பட்டதன் பின்னர் அரசாங்கத்தின் சில செயற்பாடுகள் தொடர்பாக மக்கள் விடுதலை முன்னணியுடன் சிக்கல் தோன்றியிருப்பதாக கூறப்படுகின்ற போதிலும், அவர்கள் தனக்கு அனுப்பிவைத்துள்ள நான்கு பக்க கடிதத்தில் எந்தவொரு இடத்திலும் அவற்றைக் கோடிட்டுக் காட்டவில்லை என்று ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க தெரிவிக்கின்றார். மக்கள் விடுதலை முன்னணியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வாவிற்கு ஜனாதிபதி அனுப்பி வைத்துள்ள பதில் கடிதத்தில், இரண்டு விடயங்களை மாத்திரம் கருத்தில் கொண்டு அனுப்பப்பட்டிருக்கும் முறைப்பாடுகள் ஏற்றுக் கொள்ளக் கூடியது அல்ல என்று சுட்டிக்காட்டியுள்ளதுடன் அக்குற்றச்சாட்டுக்களையும் நிராகரித்துள்ளார்.

அமைச்சரவையில் 35 பேர் மட்டுமே இடம்பெறுவார்கள் என்று தீர்மானிக்கப்பட்ட போதும், தற்போது அந்த தொகை 37 ஆக அதிகரித்துள்ளதாக மக்கள் விடுதலை முன்னணி ஜனாதிபதிக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் கூறியிருக்கிறது. எனினும் இரண்டு அமைச்சர்கள் இராஜினாமா செய்து மாகாண சபைத் தேர்தலில் போட்டியிடுவதனால், அமைச்சரவை அமைச்சர்களின் எண்ணிக்கையில் மாற்றம் ஏற்படவில்லை என்பதை மக்கள் விடுதலை முன்னணியினர் புரிந்து கொள்வார்கள் என்று ஜனாதிபதி தெரிவித்துள்ளார். சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் சகல உறுப்பினர்களுக்கும் அமைச்சர் அல்லது பிரதியமைச்சர் பதவி வழங்கப்பட்டுள்ளதாக மக்கள் விடுதலை முன்னணி குற்றம் சாட்டியுள்ளது. எனினும் அமைச்சர் பிரதியமைச்சர் பதவிகள் 35 பேருக்கு மட்டுப்படுத்தப்பட்டுள்ளதாக குறிப்பிடுகின்றார். இதனால் மக்கள் விடுதலை முன்னணியிடம் ஏற்பட்டுள்ள சிக்கல்கள் யாதென்பது குறித்து தனக்கு தெளிவாக புரியவில்லை என்று ரில்வின் சில்வாவுக்கு எழுதியுள்ள கடிதத்தில் ஜனாதிபதி கூறியிருக்கின்றார். எனவே இது தொடர்பாக நேற்று மாலை நடைபெறும் தம்முடனான சந்திப்பின் போது, மேலதிக விபரங்களை விளக்க இருப்பதாகவும் ஜனாதிபதி கூறியிருக்கின்றார். எனினும் இந்த சந்திப்பு அர்த்தமுள்ளதாக அமைய வேண்டும் என்வும் அவர் எழுதியுள்ள பதில் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# கொலையாளிகள் எவரும் இதுவரை கைது செய்யப்படவில்லை!

(நமது நிருபர்)

நேற்று காலை மட்டக்களப்பில் கொலை செய்யப்பட்ட சிரேஷ்ட ஊடகவியலாளர் ஐயாத்துரை நடேசனின் பிரேத பரிசோதனை முடிவடைந்திருப்பதாக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் கடமையிலுள்ள பொலிசார் தெரிவிக்கின்றனர்.

கொலை செய்யப்பட்டவர் சம்பந்தமாக இதுவரை எவரும் கைது செய்யப்படவில்லை என்று மட்டக்களப்பு பொலிஸ் தலைமையகம் கூறுகிறது.

கடுமையான துப்பாக்கிச் சூட்டுக் காயங்களால் இவர் உயிரிழந்திருப்பதாக பிரேதப் பரிசோதனையின் இறுதியில் தெரிவிக்கப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

கொலை சம்பந்தப்பட்ட முழுமையான தகவல்களை பெறுவதில் சிரமம் ஏற்பட்டுள்ளதாக பொலிசார் சுட்டிக்காட்டுகின்றனர். மட்டக்களப்பில் தற்போது பதற்றம் நிலவுவதனால் சாட்சியமளிப்பதற்கு பொதுமக்கள் எவரும் முன்வரவில்லையென்று பொலிசார் கூறுகின்றனர். நடேசன் கொலை செய்யப்பட்டதற்கு தமிழீழ விடுதலைப் புலிகளும், ஊடகவியலாளர்கள் பலரும், பிரமுகர்கள் பலரும் தமது கண்டனத்தையும் ஆழ்ந்த கவலையையும் தெரிவித்திருக்கின்றனர்.

# களுமுந்தன்வெளிக்கிராம மக்கள் மின்சாரம் வழங்க கோரிக்கை

(சக்திவேல்)

மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பா. அரியநேத்திரன் ஞாயிறன்று களுமுந்தன் வெளிக்கிராமத்திற்குச் சென்று அங்குள்ள மக்களின் குறை நிறைகளைக் கேட்டறிந்து கொண்டார்.

இப்பிரதேசத்திற்கு மின்சார வசதிகளை ஏற்படுத்தித் தர வேண்டும் இக்கிராம மக்கள் நாடாளுடன்ற உறுப்பினர் அரியநேத்திரனிடம் வேண்டுகோள் விடுத்தனர்.

இது தொடர்பாக தான் கவனத்தில் எடுத்து மின்சாரம் வழங்குதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதாகத் தெரிவித்தார்.

# தமிழ்க் கூட்டமைப்பு எம்.பிக்களுக்கு திருமலையில் கருத்தரங்கு

(கி.ரகுலக்ஷனா)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான கருத்தரங்கு எதிர்வரும் 10ம், 11ம் திகதிகளில் திருகோணமலை உப்பு வெளியில் அமைந்துள்ள அரசாங்க விருந்தினர் விடுதியில் வடக்கு கிழக்கு மாகாண சபையின் ஏற்பாட்டில் நடைபெறவுள்ளது.

இக்கருத்தரங்கில் வடக்கு கிழக்கு மாகாணச் செயலாளர், வட கிழக்கு ஆளுனர், பிரதேச செயலாளர் என பல முக்கிய பிரமுகர்கள் கலந்து கொள்ளவுள்ளனர். இக்கருத்தரங்கு நிகழ்வில் வடக்கு கிழக்கினுடைய அபிவிருத்தி தொடர்பான கலந்துரையாடல், நடப்பாண்டு திட்டங்கள் போன்ற விடயங்கள் பற்றிக் கலந்துரையாடப்படவுள்ளதாக தெரியவருகின்றது.

# சமாதானப்பேச்சை ஆரம்பிப்பது தொடர்பான முழுப்பொறுப்பும் ஜனாதிபதியிடமேயுள்ளது

## விடுதலைப்புலிகள் அறிவிப்பு

(நமது நிருபர்)

சமாதானப் பேச்சுவார்த்தைகளை மீள ஆரம்பிப்பதற்கான நேரத்தையும், அது தொடர்பான நிகழ்ச்சி நிரலினையும் அறிவிக்க வேண்டிய பொறுப்பு ஜனாதிபதியிடமே இருப்பதாக தமிழீழ விடுதலைப் புலிகள் தெரிவித்துள்ளனர்.

சமாதானப் பேச்சுவார்த்தை தொடர்பாக, கொழும்பிலிருந்து வெளியாகும் ஆங்கில நாளிதழ் ஒன்றுக்கு, தமிழீழ விடுதலைப் புலிகளின் ஊடகப் பேச்சாளர் தயா மாஸ்டர் கருத்து வெளியிடுகையிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

வடக்கு கிழக்குக்கான இடைக்கால நிருவாக சபை தொடர்பாகவே முதலில் பேசப்பட வேண்டுமென்ற, தமது உறுதியான நிலைப்பாட்டினை தமிழீழ விடுதலைப் புலிகள் ஏற்கனவே அரசாங்கத்திடம் தெளிவாக வெளிப்படுத்தியுள்ளதாகவும், ஆனால் தமிழீழ விடுதலைப் புலிகளின் இந்த உறுதியான நிலைப்பாடினை, ஏற்றுக் கொள்வதற்கு சிறிலங்கா அரசாங்கம் தயங்கி வருகின்றமையே பேச்சுவார்த்தையை மீள ஆரம்பிப்பதற்கான முக்கிய தடையாக விளங்குவதாகவும், தயா மாஸ்டர் மேலும் தெரிவித்துள்ளார். சமாதானப் பேச்சுவார்த்தையை மீள ஆரம்பிப்பது தொடர்பான ஜனாதிபதியின் பதிலுக்காக தாம் இன்னமும் காத்துக் கொண்டிருப்பதாகவும் தமிழீழ விடுதலைப் புலிகளின் ஊடகப் பேச்சாளர் தயா மாஸ்டர் தெரிவித்துள்ளார்.

# ஜே.வி.பி., ஸ்ரீ லங்கா சுதந்திரக்கட்சி முறுகல் நிலை தீவிரம்

(நமது நிருபர்)

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் ஜே.வி.பி மற்றும் சிறிலங்கா சுதந்திரக் கூட்டமைப்பினர் இடையேயான முறுகல் நிலை மேலும் வலுப்பெற்றுள்ளது.

பாதுகாப்பு பிரதியமைச்சர், மற்றும் புத்த சாசன அமைச்சராக முன்னாள் பிரதமர் ரட்ண சிறி விக்கிரம நாயக்கவும், அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சராக, டி.ஈ.டபிள்யூ குணசேகரவும், ஜனாதிபதியால் புதிதாக நியமிக்கப்பட்டமை தொடர்பாகவே இந்த முறுகல் நிலை வலுப்பெற்றுள்ளதாக தெரியவருகிறது.

மேற்படி ஜனாதிபதியால் வழங்கப்பட்டுள்ள இரண்டு நியமனங்களும், 35 அமைச்சர்கள் மட்டுமே அமைச்சரவையில் அங்கம் வகிக்கலாம் என்ற கூட்டமைப்பின் விதியினை ஜனாதிபதி மீறி அமைச்சர்களின் எண்ணிக்கையை 37 ஆக அதிகரித்துள்ளதாகவும் ஜே.வி.பியால் குற்றஞ் சாட்டப்பட்டுள்ளது.

இதேவேளை சிறிலங்காவின் நாடாளுமன்றத்துக்கு 20 அமைச்சர்களே போதுமானதென ஜே.வி.பி முன்னர் கூறி வந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

---

**எழுத்தாளர்..........**

தமிழ் சமூகம் சுதாகரித்துக் கொள்வதற்கான அறிவுறுத்தல்களையும் சுட்டிக்காட்டுதல்களையும் மேற்கொண்டு ஊடகவியலாளனுக்குரிய சிறந்த பண்பினை கொண்டவர்.

யுத்த, சமாதான காலத்தில் இன்னல்களை அனுபவித்த தமிழ் மக்களின் வாழ்வியல் துன்பங்களை விடுதலையுடன் கூடிய இயல்பு வாழ்க்கைக்காக மக்கள் கொண்ட ஏக்கங்களை உள்ளூரிலும் உலக நாடுகளிலும் வெளிக் கொண்டு வந்ததன் மூலம் சர்வதேசத்தின் நம்பிக்கை குரலாக விளங்கியவர். தமிழ்த் தேசிய தலைமையின் கீழ் மிகுந்த மதிப்பும் பற்றுறுதியும் நம்பிக்கையையும் பெற்றவர் அந்த தலைமையின் நம்பிக்கைக்குரிய தகமைகளை மக்கள் மத்தியில் வெளிப்படுத்தி தமிழ்த்தேசிய தலைமையின் கீழ் மக்கள் அணிதிரளவேண்டிய வரலாற்று அவசியத்தை மக்களுக்கு உணர்த்தியவர். உண்மை நியாயம் என்பவற்றின் பக்கமாக அசையாது நிலையெடுத்து நின்றவர் ஆபத்துக்கள் எதிர்நோக்கிய போதும் தனது நிலையில் இருந்து சிறிதும் மாறுபடாது வரலாற்றில் தான் வரித்த பாத்திரத்தை முழுமைபடுத்தியவர்.

கல்விமான்கள், ஊடகவியலாளர்கள் தமிழ்மக்களின் நேச சக்திகள் கொல்லப்படுவது கொடுஞ்செயலாகும் சமாதானம் நிலவிவரும் இக்காலத்திலும் இத்தகைய கொலை நடவடிக்கைகள் மூலம் சமாதானத்திற்கெதிரான சக்திகள் தமது அடாவடித்தனங்களை மேற்கொண்டுவருகிறார்கள் இந்நடவடிக்கையானது இத்தீவில் வாழும் மக்களை மீண்டும் இன்னலுக்குள் உள்ளாக்கும் வரலாற்றுக்காலத்திற்கே இட்டுச்செல்லும்.

எனவே இந்நிலையை கருத்தில் எடுத்து அரச படைகளும் அப்படைகளுடன் இணைந்து செயற்படுபவர்களும் இக்கொலைகளை நிறுத்திக் கொள்வதே இக்காலத்தின் கட்டாயமாகும்.

மூத்த ஊடகவியலாளர் ஜி.நடேசன் அவர்களின் இழப்பினால் தாழாது துயறுற்றிருக்கும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அவரின் பிரிவு அவர் குடும்பத்திற்கு எவ்வளவு தாக்கத்தையும், சோகத்தையும் ஏற்படுத்தியதோ அதேயளவுக்கு பத்திரிகை உலகிற்கும் எமக்கும் எமது தேசத்தின் வரலாற்றிற்கும் ஏற்படுத்தியிருக்கிறது.

---

**மனோ கணேஸன்.........**

நடைபெறவுள்ள மாகாண சபைத் தேர்தல்கள் குறித்தும், அரசுடனான சமாதான பேச்சுவார்த்தைகளில் தற்போதைய நிலை குறித்தும், இன்றைய சந்திப்பின் போது ஆராயப்பட்டதாக மேல் மாகாண மக்கள் முன்னணியின் தலைவர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

---

**ஊடகவியலாளர்.............**

உத்தரவிடப்பட்டதற்கிணங்க நேற்று மாலை இவரது சடலம் வாவிக்கரையில் அமைந்துள்ள அவரது இல்லத்திற்கு எடுத்துவரப்பட்டது. அதனையடுத்து பெருந்திரளான மக்கள், மாணவர்கள், கல்விமான்கள், புத்திஜீவிகள், ஊடகவியலாளர்கள் என பல ஆயிரக்கணக்கானோர் அஞ்சலி செலுத்தினர்.

இன்று பிற்பகல் இவரது சொந்த ஊரான யாழ் வடமாராச்சி, நெல்லியடி கரவெட்டிக்கு எடுத்துச் செல்லப்படவிருப்பதாக குடும்பத்தார் தெரிவித்தனர்.

வியாபார பட்டதாரியான ஊடகவியலாளர் அமரர் நடேசன் அவர்கள் ஆரம்பத்தில் மினுவாங்கொடையில் ஆசிரியராகப் பணியாற்றிபின் மட்டக்களப்பு இந்துக் கல்லூரிக்கு மாற்றலாகி வந்தார்.

தற்போது உள்நாட்டு இறைவரித் திணைக்கள சிரேஸ்ட வரி உத்தியோகஸ்தராகக் கடமையாற்றி வந்தவர். இவரது மனைவி ஒரு ஆசிரியை, இரண்டு மகன்களும், இரண்டு மகள்களுமாக இவருக்கு நான்கு பிள்ளைகள்.

கடந்த இருவது வருடகாலமாக ஊடகத்துறையில் சேவையாற்றியுள்ள இவர் இறுதியாக எழுதியுள்ள கட்டுரை ஞாயிறு வீரகேசரி வாரவெளியீட்டில் வெளிவந்துள்ளது.

1954ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 27ம் திகதி பிறந்த இவருக்கு தற்போது வயது ஐம்பது. இறுதியாக இவர் எழுதிய கட்டுரை தான் இவரது மரணத்திற்குக் காரணமாக அமைந்ததா என மக்கள் மத்தியில் கேள்வி எழுப்பட்டுள்ளது.

இவர் எழுதிய இன முரண்பாடுகளின் வரலாறு நூலுக்கு சாகித்திய மண்டலப் பரிசு கிடைத்தது குறிப்பிடத்தக்கது.

அன்னாரின் மறைவையொட்டி கிழக்கிலங்கைச் செய்தியாளர் சங்கம், தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியம், வட இலங்கைப் பத்திரிகையாளர் சங்கம், தென்கிழக்கிலங்கை செய்தியாளர் சங்கம் உட்பட பல உள்நாட்டு, வெளிநாட்டு ஊடக அமைப்புக்கள் ஆழ்ந்த அனுதாபத்தையும் கண்டனத்தையும் தெரிவித்துள்ளன.

---

**கல்முனை.........**

இவருக்கு பின்னால் வந்த வேன் மோதி மரணமானதாக தெரியவருகின்றது. இவருடைய சடலத்தினை உடன் கல்முனை ஆதார வைத்தியசாலைக்கு கொண்டு சென்று பின் இவருடைய குடும்த்தினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இவ்விபத்துத் தொடர்பாக கல்முனைப் பொலிஸார் மேலதீக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். இச்சம்பவத்தையடுத்து நேற்று கல்முனையில் நடைபெற்ற வாகன விபத்தில் இருவர் பலியாகியுள்ளதாகத் தெரியவருகின்றது.

---

**விடுதலைப்.........**

விடுதலைப் புலிகளின் இந்த முயற்சியினை மனித உரிமை மற்றும் அபிவிருத்தி நிறுவனத்தின் செயலாளர் திரு என்.கந்தையா பெரிதும் வரவேற்றுள்ளதோடு, தமிழீழ விடுதலைப் புலிகளின் இந்த மனித உரிமை நிறுவனத்துக்கு சுயாதீனமான உத்தியோகஸ்தர்களே பணியில் ஈடுபடுத்தப்பட வேண்டுமெனவும், இதன் மூலமே, புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களுக்கு வெளியேயும் இந்நிறுவனத்தின் பணிகளை விரிவுபடுத்த முடியுமெனவும் அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

---

**வயது குறைந்த...............**

அம்பாறை மாவட்டத்திலுள்ள வயது குறைந்த போராளிகளுக்கு மாத்திரமன்றி யுத்தத்தால் பாதிக்கப்பட்ட வடக்குக் கிழக்கு மாகாணத்தின் எல்லா வசதியற்ற சிறுவர்களுக்கும் இத்திட்டம் முன்னெடுக்கப்படவே ண்டும் எனவும் தெரிவித்தார்.

யுனிசெப் அனுசரணையுடன் மேற்குறிப்பிட்ட திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளதாக சுவீடன் நாட்டுப் பிரதிநிதிகள் தெரிவித்தனர்.

எமது மின் அஞ்சல் முகவரி
batti@eezathanm.com

இப்பத்திரிகை நிக்கி பதிப்பகத்தில் 01-06-2004 அன்று அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.